செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686424-6-1

(108)



மா இராசமாணிக்கனார்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/91.%20%E0%AE%AE%E0%AE%BE.%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

மா.இராசமாணிக்கனார் (1907-1967)



அறிமுகம்

இராசமாணிக்கனார் 1907-ம் ஆண்டு மாணிக்கம்,தாயாரம்மாள் தம்பதியினருக்கு மகனாக ஆந்திர மாநிலம் கர்நூலில் பிறந்தார். வட்டாட்சியராக அரசுப்பணியிலிருந்த தந்தையின் பணியிட மாறுதல்கள் காரணமாக இராசமாணிக்கனாரின் கல்வியும் பல ஊர்களில் வளர்ந்தது.

தந்தையாரின் நண்பரான கே.திருவேங்கடம் என்பாரின் உதவியுடன் சென்னையில் தன் வாழ்வைத் தொடங்கி. தமிழின் முதன்மையான வரலாற்றெழுத்தாளர் மற்றும் ஆய்வாளராக இடம் பிடித்தார் என்பது கண்கூடு.

தமிழ்ப் பணி

- வண்ணாரப் பேட்டையிலுள்ள தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் 1928 - 1936 வரையில் தமிழாசிரியராகப் பணியாற்றிய இராசமாணிக்கனார் மாணவர்க்கான பாடநூல்களையும் துணைப்பாட நூல்களையும் எழுதினார்.
- இவர் 1947 முதல் 1953 வரை சென்னை விவேகானந்தர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பணியினூடே 1951ல் 'சைவ சமய வளர்ச்சி' என்னும் நூல் வெளியிட்டு முனைவர் பட்டத்தையும் பெற்றார்.
- 1953ல் மதுரை தியாகராசர் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவராகவும் தலைமை பேராசிரியராகவும் பொறுப்பேற்றார்.
- 1959 முதல் 1967 வரை சென்னைப் பல்கலைக்கழக துணை தமிழ்ப் பேராசிரியராக பொறுப்பேற்றார்.

படைப்பு

- 1930-ம் ஆண்டு ஹர்சவர்தனன், முடியுடைமூவேந்தர்கள், பொற்காலவாசகம், முசோலினி -ஆகிய நூல்களை எழுதினார்.
- பல்லவர் வரலாறு , பல்லவப் பேரரசர், மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்,தமிழக வரலாறும் பண்பாடும், தமிழ்மொழி இலக்கிய வரலாறு, சோழர் வரலாறு, தமிழ் இனம், தமிழக ஆட்சி, தமிழ் அமுதம், இலக்கிய அமுதம், தமிழ்நாட்டு வடஎல்லை, தமிழகக் கலைகள், புதிய தமிழகம், சிலப்பதிகாரக் காட்சிகள், சேக்கிழார் ஆராய்ச்சி, சைவ சமயம், சைவ சமய வளர்ச்சி,பெரியபுராண ஆராய்ச்சி, நாற்பெரும் புலவர்கள் உள்ளிட்ட பல நூல்கள் எழுதியிருக்கிறார்.
- தமிழ் இலக்கியமான பத்துப்பாட்டை ஆய்ந்து இவர் எழுதிய 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற நூல் இவரது மறைவுக்குப் பின்னர் துணை வேந்தர் நெ.து.சுந்தரவடிவேலு அவர்களால் 1970ல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழி வெளியிடப்பட்டது.

- 1966-ல் மலேசியாவில் நடந்த முதலாம் உலகத்தமிழ் மாநாட்டில் இவரது ஆய்வுக்கட்டுரையான 'சங்க காலத் தமிழ்ச் சமுதாயம்' அறிஞர்களால் ஏற்கப்பட்டது.
- தமிழர் தம் பண்பாட்டைக் காக்கும் வகையில் தமிழர் திருமணம் நூலை எழுதினார்.

விருதுகள்/சிறப்புகள்

- தமிழக அரசு இவரது பணியை பாராட்டி 1966ல் மலேசியாவில் நடைபெற்ற முதலாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு மா.இராசமாணிக்கனார் அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியது .
- மா.இராசமாணிக்கனார் அவர்களின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது.
- திருவாவடுதுறை ஆதினம் 1959ஆம் ஆண்டு இவருக்கு 'சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கினார்.
- மதுரை திருஞானசம்பந்த ஆதினத்திடமிருந்து 1955ஆம் ஆண்டு 'ஆராய்ச்சிக் கலைஞர்' என்ற பட்டம் பெற்றார்.
- தருமபுரம் ஆதினம் 1963ஆம் ஆண்டு 'சைவ இலக்கியப் பேரறிஞர்' என்று பட்டம் வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.
- மா. இராசமாணிக்கனார் பெயரில் அவர் மகன் கண் மருத்துவர் இரா.கலைக்கோவனால் "டாக்டர்.மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்" திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டது.
- "தலைமைப் புலமை நிலையம் ,தமிழ் மொழிக்குத் தக்க பாதுகாப்பு வளையம் "- என இவரை புகந்துரைக்கிறார் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

சிந்து சமவெளி நாகரிகம் பற்றி முதன் முதலாக நூல் எழுதியவர், மட்டுமல்லாமல் பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு மற்றும் சோழர் ஆராய்ச்சி நூல் ஆகிய குறிப்பிடத்தகுந்த நூல்களை எழுதிய வரலாற்றாய்வாளர்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

டாக்டர் மா.இராசமாணிக்கனார்
அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

01.	இலக்கிய அமுதம்
02.	கால ஆராய்ச்சி
03.	சிலப்பதிகாரக் காட்சிகள்
04.	சேக்கிழார்
05.	சேக்கிழார் - ஆராய்ச்சி நூல்
06.	சைவ சமய வளர்ச்சி
07.	சைவ சமயம்
08.	சோழர் வரலாறு
09.	தமிழ் அமுதம்
10.	தமிழ் இனம்
11.	தமிழக ஆட்சி
12.	தமிழகக் கலைகள்
13.	தமிழ்நாட்டு வட எல்லை
14.	தமிழ்மொழி இலக்கிய வரலாறு
15.	நாற்பெரும் புலவர்கள்
16.	பல்லவப் பேரரசர்
17.	பல்லவர் வரலாறு
18.	புதிய தமிழகம்
19.	பெரிய புராண ஆராய்ச்சி
20.	மொஹஞ்சதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்

HTTPS://KEETRU.COM/INDEX.PHP/2009-11-06-11-47-46/16-2017/32656-2017-03-14-04-16-59

மறக்க முடியுமா?

பேராசிரியர் மா.இராசமாணிக்கனார்

எழில்.இளங்கோவன்

நில அளவையாளராக இருந்து வட்டாட்சியராகப் பதவி உயர்வு பெற்ற மாணிக்கம் - தாயாரம்மாள் இணையரின் ஏழு பிள்ளைகளுள் மா.இராசமாணிக்கனாரும் ஒருவர்.

1907ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாள் இவர் பிறந்தார்.

இராசமாணிக்கனாரின் தந்தை மாணிக்கம் வட்டாட்சியர் என்பதனால் அடிக்கடி பணி மாறுதல் பெற்றுச் சென்று கொண்டிருந்தார்.

அதனால் இராசமாணிக்கனாரின் தொடக்க நிலைப்படிப்பு தடைபட்டு, தொடர முடியாமல் இருந்தது.

இந்நிலையில் ஆந்திர மாநிலம் சித்தூரில் இவரின் தந்தை 4 ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்போதுதான் இராசமாணிக்கனார் நான்காம் வகுப்பு வரை தெலுங்கு மொழியில் பயின்றார்.

குறுகிய காலத்தில் தந்தை மரணம் அடைந்ததால் மாணிக்கனாரைக் கவனிக்கும் பொறுப்பு, அவரின் அண்ணன் இராமகிருட்டிணனுக்கு ஏற்பட்டது.

குடும்ப வறுமை காரணமாக நன்னிலத்தில் ஒரு தையல் கடையில், சிறுவனாக இருந்த தம்பி இராசமாணிக்கனாரை வேலைக்குச் சேர்த்து விட்டார் அண்ணன்.

ஒரு நாள் தஞ்சை புனித பீட்டர் பள்ளியின் தலைமை ஆசிரியரை சந்தித்து தான் படிக்க விரும்புவதாகச் சொல்லியிருக்கிறார் இராசமாணிக்கனார்.

தலைமை ஆசிரியரின் உதவியால் அப்பள்ளியில் பயின்று இறுதித் தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார் இராசமாணிக்கனார்.

அப்பள்ளியில் ஆசிரியராக இருந்த கரந்தை கவிஞர் இரா.வெங்கடாச்சலம், இராசமாணிக்கனாரின் அறிவாற்றலைக் கண்டு வியந்து, அவரைக் கரந்தை உமாமகேசுவரனார், நா.மு.வேங்கடசாமி நாட்டார், ரா.ராகவையங்கார் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் அனுப்பிப் பயிலச்செய்தார்.

1928ஆம் ஆண்டு சென்னை வந்த இராசமாணிக்கனார், வண்ணாரப்பேட்டையில் இருந்த தியாகராயர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார்.

1935ஆம் ஆண்டு வித்துவான் தேர்வில் தேறினார்.

1939ஆம் ஆண்டு பி.ஓ.எல். பட்டம் பெற்றார்.

1945ஆம் ஆண்டு ‘பெரியபுராண ஆராய்ச்சி’ என்ற ஆய்வுக்கட்டுரைக்காக எம்.ஓ.எல். பட்டம் பெற்றார்.

1951 ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

இவரின் இளமைக் காலத்தில் சித்தர்களின் பாடல்கள், வடலூர் வள்ளலாரின் திருஅருட்பா போன்றவைகளை ஆழ்ந்து படித்தார்.

அதன் விளைவாக இவரிடம் சுயமரியாதைச் சிந்தனைகள் மேலேங்கி நின்றன.

சாதி ஒழிப்பு- பற்றிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

தமிழர்களின் திருமண இல்லங்களில் சடங்கு சம்பிரதாயங்களுடன், ஓமம் வளர்த்துச் செய்யும் சடங்குத் திருமணங்களை ஏற்க மறுத்தார்.

அதற்காகவே ‘தமிழர் திருமணம்’ என்ற முற்போக்கு நூலை எழுதிச் சுயமரியாதைத் திருமணத்தை வரவேற்றார்.

1947 தொடங்கி 1953 வரை சென்னை விவேகானந்தா கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார்.

1953ஆம் ஆண்டில் மதுரை தியாகராயர் கல்லூரியில் பேராசிரியராகப் பொறுப்பேற்று தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கினார்.

1959 தொடக்கம் 1967 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

சைவ சித்தாந்தம் குறித்த அவரின் ஆய்வுகளும், கட்டுரைகளும், நூல்களும் பெரும் வரவேற்ப்பைப் பெற்றன. அதனால் -

திருவாவடுதுறை ஆதினம் 1959ஆம் ஆண்டு இவருக்கு ‘சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்’ என்ற பட்டத்தை வழங்கினார்.

மதுரை திருஞானசம்பந்த ஆதினத்திடமிருந்து 1955ஆம் ஆண்டு ‘ஆராய்ச்சிக் கலைஞர்’ என்ற பட்டம் பெற்றார்.

தருமபுரம் ஆதினம் 1963ஆம் ஆண்டு ‘சைவ இலக்கியப் பேரறிஞர்’ என்று பட்டம் வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.

1930ஆம் ஆண்டு மா.இராசமாணிக்கனார் சென்னை வண்ணாரப்பேட்டை தியாகராயர் பள்ளியில் ஆசிரியராக இருந்த கால கட்டங்களில் -

1. ஹர்சவர்தனன்
2. முடியுடை மூவேந்தர்கள்
3. பொற்கால வாசகம்
4. முசோலினி

- ஆகிய நூல்களை எழுதினார்.

தொடர்ந்து அவர் தமிழ், வரலாறு, இலக்கியம், சைவம் போன்ற பல ஆய்வு நூல்களை எழுதியிருக்கிறார்.

பல்லவர் வரலாறு - பல்லவப் பேரரசர்- மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் - தமிழக வரலாறும் பண்பாடும் - தமிழ்மொழி இலக்கிய வரலாறு - சோழர் வரலாறு - தமிழ் இனம் - தமிழக ஆட்சி - தமிழ் அமுதம் - இலக்கிய அமுதம் - தமிழ்நாட்டு வடஎல்லை - தமிழகக் கலைகள் - புதிய தமிழகம் - சிலப்பதிகாரக் காட்சிகள் - சேக்கிழார் - சேக்கிழார் ஆராய்ச்சி - சைவ சமயம் - சைவ சமய வளர்ச்சி - பெரியபுராண ஆராய்ச்சி - நாற்பெரும் புலவர்கள் என்று பல நூல்கள் எழுதியிருக்கிறார்.

இவரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்க ஒரு நூல் ‘பத்துப்பாட்டு ஆராய்ச்சி’.

பேராசிரியர் டாக்டர் மா.இராசமாணிக்கனார் அவர்கள் 1967ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாள் மரணம் அடைந்தார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பொறுப்பில் இருந்தபோது மாரடைப்பினால் அவர் மரணம் அடைந்தார்.

அவர் மரணம் அடைவதற்கு முன், அவர் எழுதிய ‘பத்துப்பாட்டு ஆராய்ச்சி’ கையெழுத்துப் படிகளைப் பல்கலைக் கழகத்திடம் கொடுத்து, நூலாக வெளியிடுமாறு வேண்டியிருக்கிறார்.

ஆனால் பேராசிரியர் இராசமாணிக்கனார் மறைந்த உடன், அவர் எழுதிய பத்துப்பாட்டு ஆராய்ச்சி நூலின் கையெழுத்துப் படிகளை ஓர் அறையின் மூலையில் போட்டு மூடிவிட்டார்கள் சென்னை பல்கலைக் கழகத்தார்.

பின்னர் அதே பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பொறுப்பேற்ற நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் தற்செயலாக மூடிக்கிடந்த அறையைத் திறந்து பார்த்தபோது, அறையின் முலையில்

பத்துப் பாட்டு ஆராய்ச்சி கையெழுத்துப் படிகள் கிடப்பதைப் பார்த்தார்.

உடனே அவர் அந்தப் படிகளை எடுத்து அதே பத்துப்பாட்டு என்ற தலைப்பில், பல்கலைக்கழக வெளியீடாக 1970ஆம் ஆண்டு வெளியிடச் செய்தார்.

நெ.து.சுந்தரவடிவேலு சொல்கிறார், “இவர் (இராசமாணிக்கனார்) எழுதிய பத்துப்பாட்டு ஆராய்ச்சியை வெளியிட வேண்டி, தான் பணியாற்றிய சென்னைப் பல்கலைக் கழகத்தாரிடம் ஒப்படைத்ததற்குப் பதில் அவரே வெளியிட்டு இருந்தால், பணமாவது கிடைத்து இருக்கும். சென்னைப் பல்கலைக் கழகம் பத்துப்பாட்டு நூலை, யாரும் காணாத வண்ணம் பூட்டி வைத்துவிட்டது வேதனை”.

மறக்கமுடியுமா இவரை நாம் மறக்கமுடியுமா.

இளமை வாழ்க்கை

இவரின் தந்தையான மாணிக்கம், நிலம் அளந்து தரம் விதிக்கும் அலுவலகத்தில் ஒரு பிரிவின் மேலாளராக இருந்து, வட்டாட்சியராக உயர்ந்தவர். இவரின் அன்னை தாயாரம்மாள். ஏழு பேர் பிறந்த குடும்பத்தில் இராசமாணிக்கனாரும் அவரின் அண்ணனான இராமகிருட்டிணன் என்பவருமே மிஞ்சினர். அரசுப் பணியாளரான தந்தையார் அலுவல் காரணமாகப் பல ஊர்களுக்கும் மாற்றப்பட்டதால் இராசமாணிக்கனாரின் கல்வியும் பல ஊர்களில் வளர்ந்தது. பல ஆண்டுகள் வரையில் தற்போதைய ஆந்திர மாநில கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் இருக்க நேரிட்டதால் நான்காம் வகுப்பு வரை தெலுங்கு மொழியே பயின்ற இவர், 1916 இல் தந்தையார் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிலக்கோட்டைக்கு மாற்றப்பட்ட பிறகே தமிழ் பயிலத் தொடங்கினார். 1921-இல் பணி காரணமாகத் திண்டுக்கல் வந்த தமையனார் இராமகிருட்டிணருக்குத் துணையாகத் தாயாருடன் இராசமாணிக்கனாரும் வந்தார். அங்குத் திண்டுக்கல் தூய மேரி உயர்நிலைப் பள்ளியின் ஐந்தாம் வகுப்பு மாணவராக அவர் சேர்ந்த நிலையில் தமிழ்க்கல்வி தொடர்ந்தது. இவர் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கையில் தந்தையார் மறைந்ததால் திண்டுக்கல்லிலிருந்து நிலக்கோட்டைக்கு வந்த இராசமாணிக்கனாரின் கல்வி மீண்டும் தடைப்பட்டது. குடும்பப் பொறுப்பேற்ற தமையனாருடன் அவரும் அன்னையாரும் இருக்க

வேண்டிய சூழல் அமைந்ததால் தமையனார் பணிமாற்றம் பெற்ற இடங்களுக்கெல்லாம் அவரும் செல்ல நேர்ந்தது. நன்னிலத்தில் நிலையாக ஓராண்டு தங்கிப் பணியாற்றும் வாய்ப்பைத் தமையனார் பெற்ற நிலையில் 1920 இல் இராசமாணிக்கனார் மீண்டும் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்து பயின்று தேறினார்.

தமிழார்வம்

திண்டுக்கல் நகரவை உயர்நிலைப்பள்ளியில் அந்நாளில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றி வந்த ஒருவர் இராசமாணிக்கனாருக்குப் பள்ளி அருகிலிருந்த மௌனசாமி மடத்தின் இளந்துறவி ஒருவரை அறிமுகப்படுத்தினார். அத்துறவி சித்தர் பாடல்களையும் அருட்பாவையும் இவர் அறியுமாறு செய்தார். சித்தரிடம் பயின்றதால் இளமையிலேயே சாதி ஒழிப்பு குறித்தும் தமிழ் இலக்கியம் குறித்தும் இவருக்கு ஆர்வம் பிறந்தது.

மீண்டும் தமையனார் இராமகிருட்டிணருக்கு நன்னிலத்திலிருந்து தஞ்சாவூருக்குப் பணி மாற்றலாகிய நிலையில் அங்குத் தம் படிப்பைத் தொடர விரும்பினார் இராசமாணிக்கனார். ஆனால் மாணிக்கனார் படிப்பு பலமுறை தடைபட்டதால் அவரை ஒரு தையல் கடையில் அவரது அண்ணன் வேலைக்குச் சேர்த்து விட்டார். ஆனால் படிப்பார்வம் கொண்ட இராசமாணிக்கனாரின் கல்வி தஞ்சாவூர் புனித பீட்டர் பள்ளித் தலைமையாசிரியரின் பேருதவியால் தொடர்ந்தது. பள்ளியில் முதல் மாணவராக வந்ததால் இவரின் கல்வி தடையின்றித் தொடர்ந்தது.

இவரது உயர்நிலைக் கல்வியின் போது இவரின் அண்ணனுக்கு மீண்டும் ஆந்திர மாநிலத்திற்குப் பணிமாற்றம் ஆனது. அவர் அனுப்பிய பணம் கல்வி செலவுக்குப் போதாததால் இவர் இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்குத் தனிப்பாடம் நடத்தி அதில் வரும் வருவாயை வைத்துக் கல்வியைத் தொடர்ந்தார்.

தஞ்சாவூர் பள்ளியின் பேராசிரியரான கரந்தை கவியரசு அ. வேங்கடாசலம் பிள்ளை என்பவராலும் அவரின் உதவியால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே. உமாமகேசுவரன், ந.மு.வேங்கடசாமி நாட்டார், உ.வே.சாமிநாதையர், இரா. இராகவையங்கார் போன்ற தமிழறிஞர்களாலும் இவரின் தமிழார்வமும் சமய ஆர்வமும் நெறிப்படுத்தப்பட்டது.

இலக்கிய வாழ்க்கை

மா. இராசமாணிக்கனார் அண்ணன் இராமகிருஷ்ணனுடன் நன்னிலத்தில் இருந்த போது மௌனசாமி மடத்தில் இருந்த துறவியிடம் சித்தர் பாடல்கள் மற்றும் அருட்பாட்கள் கற்றார். தஞ்சையிலிருந்த போது தஞ்சை தூய பீட்டர் பள்ளி தலைமையாசிரியரின் உதவியுடன் தஞ்சை பள்ளி பேராசிரியர்கள் கரந்தை அ. வேங்கடாசலம் பிள்ளை, கரந்தை தமிழ் சங்கத்தினர்களான வே. உமாமகேசுவரன், ந.மு. வேங்கடசாமி நாட்டார், உ.வே. சாமிநாதையர், இரா. இராகவையங்கார் போன்ற தமிழறிஞர்களிடம் பாடம் கேட்டார்.

1930-ம் ஆண்டு தன் முதல் நூலான 'நாற்பெரும் வள்ளல்கள்'-யை வெளியிட்டார். 'தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தார்' வேண்டுகோளுக்கு இணங்க 'தமிழர் திருமண நூல்' இயற்றினார். மொஹெஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு போன்ற நூல்கள் அவருக்கு வரலாற்றாய்வாளர் என்ற இடத்தை அளித்தன. சைவ சமயம் சார்ந்து 'சைவ சமய வளர்ச்சி' ,'சேக்கிழார்' ,'பெரியபுராணம் ஆராய்ச்சி' ஆகிய நூல்களை எழுதினார். 1966-ம் ஆண்டு மலேசிய நாட்டு கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் பங்கேற்று 'சங்க காலத் தமிழர் சமுதாய வாழ்க்கையின் சில பகுதிகள்' என்னும் ஆய்வு கட்டுரை வழங்கினார். அதே ஆண்டு 'இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரை நடை வளர்ச்சி' என்ற தலைப்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் 'கல்கி நினைவுச் சொற்பொழிவு'

நிகழ்த்தினார். அவர் இறந்த பின் 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்னும் நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக வெளியிடப்பெற்றது.

பங்களிப்பு

மா. இராசமாணிக்கனாரின் பங்களிப்பு மூன்று களங்களில் மதிப்பிடத்தக்கது.

இலக்கிய ஆய்வு

ஐந்தாண்டுகள் ஆய்வு செய்து'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்னும் நூலை விரிவாக எழுதினார். இந்நூல் வழியாக சங்க கால வாழ்கையைப் பதிவு செய்ய முற்பட்டார். 'பத்துப்பாட்டின்' தகவல்களை கொண்டு பிற்காலக் கல்வெட்டுச்செய்திகளுடன் இணைத்து ஆய்வு செய்திருக்கிறார். தமிழ் இலக்கிய வரலாறு, கம்பர் யார்? திருவள்ளுவரின் காலம் என்ன?, இலக்கிய அமுதம், இலக்கிய அறிமுகம், என்று இலக்கியம் சார்ந்து அறிமுக ஆய்வுக்குரிய நூல்களை எழுதினார். 'இருபதாம் நூற்றாண்டு உரைநடை வளர்ச்சி' இவருடைய இன்னொரு குறிப்பிடத்தக்க நூலாகும்.

சைவ சமய ஆய்வு


இராசமாணிக்கனார் சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் நிறைய நூல்களை எழுதினார். சைவ சமய வளர்ச்சி, பெரிய புராணம், சேக்கிழார், ஆகிய நூல்களை சைவ சமயம் சார்ந்து எழுதியுள்ளார். சைவ சமயம் பற்றி புறவயமாக எழுதப்பட்ட வரலாற்று ஆய்வுகளில் இராசமாணிக்கனார் எழுதியவை முன்னோடி முயற்சிகள். அவை உரிய முறையில் பின்னர் முன்னெடுக்கப்படவில்லை. மதம்சார்ந்த அகவயப்பார்வைகளே பின்னர் ஏராளமாக உருவாயின.

வரலாற்றாய்வு

இராசமாணிக்கனாருக்கு தமிழ் வரலாற்றாய்வில் குறிப்பிடத்தக்க இடமுண்டு. வரலாற்றாய்வில் இவருடைய பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, மற்றும் தமிழில் சிந்துவெளி நாகரீகம் பற்றி எழுதிய மொஹஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரீகம் ஆகிய நூல்கள்

முதன்மை கட்ட ஆய்வுக்கு உதவியாக இருப்பவை. ஆராய்ச்சி கட்டுரைகள் என்னும் நூலில் கல்வெட்டுகள், அரசர்களின் மெய்கீர்த்திகள் அடங்கிய தகவல்களை ஆண்டு குறிப்போடு பதிப்பித்திருக்கிறார்.

இலக்கிய இடம்



மா.இராசமாணிக்கனார் வரலாறு

மா. இராசமாணிக்கனாரின் முக்கியமான பங்களிப்பு பல்லவ வரலாறு, சோழர் வரலாறு நூல்களை பொதுவாசகர்களுக்காக எளிய தமிழில் எழுதி வெளியிட்டது. சிந்து சமவெளி நாகரீகம் பற்றி தமிழில் விரிவாக எழுதியுள்ளார்.

இராசமாணிக்கனார் புறவயமான வரலாற்றாய்வில் நம்பிக்கை கொண்டவர். அவர் ஆய்வு செய்த காலத்தில் இந்திய கல்வெட்டு ஆய்வுத்துறை கல்வெட்டுகளின் படிவங்களை சில தொகுதிகள் மட்டுமே வெளியிட்டு இருந்தது. அவற்றை மட்டும் கொண்டு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளாமல் கோயில்களுக்கு சென்று நேரடியாக கல்வெட்டுகள் படித்து ஆய்வை செய்துள்ளார். அதற்காக அவர் கோயிலுக்கு சென்று ஆய்வு செய்த நாட்களையும் குறிப்பிட்டுள்ளர்.

மா. இராசமாணிக்கனார் இந்தியா சுதந்திரம் அடைந்த பின் கல்லூரி பாடத்திற்கு, மாணவர்களுக்கான தமிழ் பாட நூல்களை உருவாக்கியவர்களில் ஒருவர்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

வரலாற்றாய்வு மையம்

https://drmrajamanikkanarcentreforhistoricalresearch.com/

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் ஓர் அறிமுகம்



களஆய்வுகளில் அறியப்படும் உண்மைகளின் அடிப்படையில் வரலாற்றை உருவாக்கும் நோக்குடன் தமிழறிஞரும் வரலாற்றறிஞருமான முனைவர் மா. இராசமாணிக்கனார் பெயரில் அவர் மகன் கண் மருத்துவர் இரா. கலைக்கோவனால் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்ட ஆய்வு அமைப்பே டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்.

தோற்றம்: 1982

முகவரி: சி87, பத்தாம் குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி – 620 018.

இயக்குநர்: முனைவர் இரா. கலைக்கோவன்
மதிப்புறு இணை இயக்குநர்: முனைவர் மு. நளினி
மதிப்புறு துணை இயக்குநர்: முனைவர் அர. அகிலா
மையத்தின் ஆண்டு ஆய்விதழ் : **வரலாறு**

நோக்கம்

1. பதிவு செய்யப்படாத கல்வெட்டுகளைக் கண்டறிந்து பதிப்பித்தல்.

2. தமிழ்நாட்டுக் கலை வரலாற்றை முழுமையுற உருவாக்கல்.

3. ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் புதிய தரவுகளை வழங்கும் ஆண்டு ஆய்விதழ் வெளியிடல்.

4. களஆய்வில் நம்பிக்கையுடைய இளம் ஆய்வாளர்களை வழிநடத்தல்.

5. உலகளாவிய தமிழர்களுக்கு இலக்கியம், வரலாறு குறித்த ஆர்வத்தையும் ஆய்வு நோக்கையும் விதைத்தல்.

6. கோயில்கள் வரலாற்றுக் களங்கள் என்பதால் அது குறித்த விழிப்புணர்வைச் சமுதாயத்தில் பரவச் செய்தல்.

தொடக்கக் காலப் பணிகள்:

1. 1982-85இல் செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், மெய்கண்டார், மாலைமுரசு, திருக்கோயில், தினமணி முதலிய இதழ்களில் பல்வேறு கோயில்கள் குறித்த ஆய்வுக்கட்டுரைகள்.

2. சோழன் கோச்செங்கணான், அவரால் எழுப்பப்பட்ட மாடக்கோயில்கள் குறித்த விரிவான ஆய்வு.

3. நாட்டியசாத்திரம் பேசும் ஆடல் கரணங்கள் குறித்த களஆய்வுகள், கட்டுரைகள்.

4. 1985இல் இருந்து ஆய்வு மாணவர்கள் இணைவு. முள்ளிக்கரும்பூர், அழுந்தூர் முதலிய புதிய வரலாற்றுக் களங்கள் அறிமுகம். பழங்கோயில்கள் விரிவான கல்வெட்டு, கலை ஆய்வுகளுக்கு உட்படல்.

5. முதல் ஆய்வு நூல் 1985இல்: கலை வளர்த்த திருக்கோயில்கள் என்ற தலைப்பில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக மலர்ந்து தமிழ்நாட்டரசின் முதல் பரிசைப் பெற்றது.

6. 1985-87க்கு இடைப்பட்ட காலத்தில் காட்டுக்குள் ஒரு கலைக்கோயில் (தமிழ்ப் பல்கலைக்கழகப் பரிசு), சுவடழிந்த கோயில்கள் (தமிழ்நாட்டரசின் பரிசு), எழில் கொஞ்சும் எறும்பியூர் ஆகிய மூன்று ஆய்வு நூல்கள் வெளியாயின.

7. 1989இல் பழுவேட்டரையர்கள் பற்றிய முழுமையான ஆய்வுநூலாகப் பழுவூர்ப் புதையல்கள் கழக வெளியீடாகப் பதிவானது.

8. 1991இல் கோயிற்கலைகளில் பட்டயக் கல்வி வகுப்புகள் தொடக்கம்.

9. கோயில்களை எப்படி, ஏன் காப்பாற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வை உண்டாக்கத் திருச்சிராப்பள்ளி வானொலியில் 12 வாரங்கள் ‘கோயில்களை நோக்கி’ என்ற தலைப்பில் விழிப்புணர்வுத் தொடர். உரைச்சித்திரங்கள், பேருரைகள் வடிவில் கோயிற்கலைகள், கல்வெட்டுச் செய்திகள் தொடர்ந்து ஒலிபரப்பு.

10. தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுப் பல புதிய உண்மைகள் வெளிப்படுத்தப் பட்டன. பல தவறான செய்திகள் சான்றுகளுடன் மறுக்கப்பட்டன. இவை தொடர்பான ஆய்வுக்கட்டுரை பாரதியார் பல்கலைக்கழகம் நிகழ்த்திய

வரலாற்றாசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சியின் நிறைவுரையாக வழங்கப்பட்டது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் கலை வரலாற்றுத் துறை நிகழ்த்திய கருத்தரங்கிலும் இவை குறித்த ஆய்வுக்கட்டுரை இடம்பெற்றது.

11. தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வாளர்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் பேராசிரியர் எ. சுப்பராயலுவுடன் இணைந்து தமிழகத் தொல்லியல் கழகம் 1991இல் தோற்றுவிக்கப்பட்டது. அதன் சார்பில் வெளியான ஆவணம் முதல் இரண்டு இதழ்கள் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் வெளியிடப்பட்டன.

1992-2002க்கு இடைப்பட்ட காலப் பணிகள்

1. பழுவேட்டரையர்கள் பற்றிய ஆய்வு அவர்தம் கலைப் படைப்புகளையும் விரிவான அளவில் பெற்றுப் பழுவூர் அரசர்கள், கோயில்கள், சமுதாயம் என்ற தலைப்பில் நூலாக வெளிப்பட்டு இலக்கியப்பீடப் பரிசு பெற்றது.

2. கல்வெட்டுகள், சிற்பங்கள், இலக்கியங்கள் வழங்கும் தரவுகள் கொண்டு சோழர் கால ஆடற்கலை ஆய்வு நிறைவு. அது குறித்த நூல் தமிழ்நாட்டரசின் பரிசு பெற்றது.

3. 1993இல் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் ஆய்விதழாக வரலாறு அறிமுகம்.

4. களப்பிரர் காலமாகவும் இருண்ட காலமாகவும் அடையாளப்படும் பொதுக்காலம் 300க்கும் 600க்கும் இடைப்பட்ட தமிழ்நாட்டு வரலாற்றைக் கல்வெட்டு, இலக்கியம், தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் உருவாக்கல்.

5. பல்லவர், சோழர் காலக் கட்டடக்கலை, சிற்பக்கலை பற்றிய விரிவான ஆய்வுகள். இலங்கை கலாச்சாரத் திணைக்களப் பன்னாட்டுக்

கருத்தரங்கில் அவை குறித்த உரை. அவர்தம் வெளியீடாகக் கட்டுரைகள்.

6. மாமல்லபுரம் தருமராஜரதம் குறித்த முழுமையான ஆய்வுநூலாக அத்யந்தகாமம் வெளியிடல்.

7. திருமுறைகளில் ஆடற்கலை தொடர்பான புதிய ஆய்வுகள். உலக சைவ மாநாட்டில் கட்டுரைகள்.

8. தமிழ்நாட்டுக் கோயில்களில் 1982-2002க்கு இடைப்பட்ட 20 ஆண்டுக் காலத்தில் ஏறத்தாழ 600 புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டதுடன், ஏற்கனவே பிறரால் பதிவு செய்யப்பட்ட கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகள் அறியப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.

9. சுருக்கங்கள் மட்டுமே வெளியாகிப் பாடங்கள் வெளிவராத பல தமிழ்நாட்டுக் கோயில்களின் கல்வெட்டுகள் ‘பதிப்பிக்கப்படாத பாடங்கள்’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டன.

2003-2015க்கு இடைப்பட்ட காலப் பணிகள்

1. தமிழ்நாட்டிலுள்ள 106 குடைவரைகளிலும் முறையான களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மகேந்திரர் குடைவரைகள், தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள், மதுரை மாவட்டக் குடைவரைகள், தென்மாவட்டக் குடைவரைகள், புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள், மாமல்லபுரம் குடைவரைகள், பல்லவர் பாண்டியர் அதியர் குடைவரைகள் எனும் ஏழு விரிவான ஆய்வுத் தொகுதிகள் வெளியிடல். இதன் வழிப் புதிய சிற்பத்தொகுதிகள், கல்வெட்டுகள், கருத்துருக்கள் வெளிப்படல்.

2. 60க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுக் கோயில்கள் முழுமையான அளவில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வேடுகள் உருவாக்கம். அவற்றுள் சில நூல்களாகவும் வெளியாகியுள்ளன.

3. தமிழ்நாட்டுக் கோயில்களில் இக்காலக்கட்டக் களப்பணிகளின் போது மேலும் 400 புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டதுடன், ஏற்கனவே பிறரால் பதிவு செய்யப்பட்ட கல்வெட்டுகளின் விட்டுப் போன தொடர்ச்சிகள் அறியப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.

4. தமிழ்நாட்டுக் கலைவரலாற்றைத் தொகுக்கும் பணியின் ஒரு படியாகக் காவிரிக் கரையோரக் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஆடற் கலை, வார்ப்புக்கலை, கல்வெட்டுகள் குறித்த விரிவான ஆய்வுகள்.

5. மாடக்கோயில் ஆய்வு 32 மாடக்கோயில்களை அறியச்செய்த நிலையில் மலைக்கவைக்கும் மாடக்கோயில்கள் நூல் வெளியீடு.

6. கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு பொ. கா. 600க்கும் 1300க்கும் இடைப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட வரலாறு ஆங்கிலத்தில் உருவாக்கம்.

7. வரலாற்று நோக்குடைய கணினி, பொறியியல் இளைஞர்களின் மேலாண்மையில் வரலாறு டாட் காம் திங்கள் மின்னிதழ் உருவாகி நூற்றுக்கும் மேற்பட்ட தொகுதிகள் இணைய தளத்தில் உள்ளமை.

8. தமிழ்நாட்டுக் கலைவரலாற்றின் தோற்றம், வளர்ச்சி, கொடுக்கல், வாங்கல் பற்றிய புரிதல்களுக்காக இந்திய, கீழ்த்திசை நாட்டுக் கலைப் படைப்புகள் பற்றிய களஆய்வு.

9. வரலாற்றுச் சிறப்புடைய சிலரின் ஆளுமை ஆய்வுகள் (மகேந்திரர், அப்பர்).

2016-2021க்கு இடைப்பட்ட காலப் பணிகள்

1. சங்ககாலம், இருண்டகாலம் குறித்த விரிவான ஆய்வுகள் சங்கச்சாரல், இருண்டகாலமா எனும் தலைப்புகளில் நூல்களாயின.

2. சிராப்பள்ளி மாவட்டக் கோயில்கள் வரிசையில்

அ. தவத்துறையும் கற்குடியும்

ஆ. எறும்பியூர் – துடையூர் சோழர் தளிகள்

இ. பாச்சில் கோயில்கள்

ஈ. சிராப்பள்ளி மாவட்டச் சோழர் தளிகள் நான்கு

உ. சிராப்பள்ளி மாவட்டச் சோழர் தளிகள் ஏழு

ஆகிய ஐந்து நூல்கள் வெளியீடு.

3. தஞ்சாவூர் மாவட்ட முற்சோழர் கோயிலான புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில் குறித்த ஆய்வுநூல்.

எதிர்கால நோக்குகள்

1. தமிழ்நாட்டுக் கலைவரலாற்றை முழுமை செய்தல்.


2. ஆய்வு மையத்தால் புதிதாகக் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளைப் பல தொகுதிகளாக வெளியிடல்.

3. இந்தியப் பார்வையில் தமிழ்நாட்டுக் குடைவரைகள் பற்றிய தெளிவான சிந்தனைகளை நூலாகப் பதிவுசெய்தல்.


4. பதிப்பிக்கப்படாமல் இருக்கும் மையத்தின் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூல்களாக்கல்.

5. பல்லவர் குடைவரைகள், ஒருகல் தளிகள் ஆய்வு முடிந்து நூல்களான நிலையில் பல்லவக் கற்றளிகள் நூல் உருவாக்கல்.

6. களஆய்வுகளின் வழி பல்லவர் கலைவரலாறு நூல் உருவாக்கல்.









டாக்டர் மா.இராசமாணிக்கனார்
வரலாற்று மையமும் நானும்

கி.ஸ்ரீதரன்

http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID=1344

தமிழ்நாட்டு அரசு தொல்லியல்துறையில் 1974ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தேன்.

முதன்முதலில் தஞ்சைப் பகுதியில் தொல்லியல்கள ஆய்வினை மேற்கொண்டபோதுதான் மருத்துவர் இரா.கலைக்கோவன் அவர்களது வரலாற்றாய்வுப் பணிகள் பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தது. என்றாலும் நேரில் சந்திக்க இயலவில்லை.

தொல்லியல்துறை 1976-80 ஆண்டுகளில் மாவட்டங்கள் தோறும் கருத்தரங்குகள் மற்றும் வரலாற்றுக் கண்காட்சிகளை நடத்தியது. இதில் திருச்சி மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு தில்லைநகர் குறிஞ்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அப்போதுதான் முதன்முறையாக அவரைச் சந்தித்தேன். திருச்சியில் பதிவு அலுவலராகப் பணியாற்றிய திரு.அப்துல் மஜீத் (மேனாள் தொல்லியல்துறை இயக்குனர்) அவர்களின் வழி இந்த அறிமுகம் கிடைத்தது. சிறிது நேரம் உரையாடியதாக ஞாபகம்.



திருச்சியில் தொல்பொருள் ஆராய்ச்சி கருத்தரங்கு!

திருச்சி, ஆக. 25—

திருச்சி தில்லைநகர் குறிஞ்சி கல்யாண மண்டபத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி கருத்தரங்கு நடந்து வருகிறது.

நேற்று நடந்த கருத்தரங்கில் டாக்டர்கள் கலைக்கோவன், சிவக்கண்ணு மற்றும் ஆராய்ச்சி துறையை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கு பற்றி பத்திரிகை நிருபர்களிடம் தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இயக்குனர் டாக்டர் நாகசாமி கூறியதாவது:—

பழங்கால கல்வெட்டுகள் புதை குழி பொருட்கள், காசுகள், செப்பு பட்டயம் போன்றவைகள் கிடைத்து உள்ளன. இது 17-ம் 18-ம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும்.

எம். ஜி. ஆர். கவனம்!

இவைகளின் சிறப்புகள் என்ன, நமது வரலாற்றுக்கு இது எப்படி உதவும் என்பது சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்த முதல்-அமைச்சர் எம். ஜி. ஆர். தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

எனவே தான் மாதம் தோறும் இப்படிப் பட்ட கருத்தரங்கு நடத்த முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. முதலில் தஞ்சையில் இந்த கருத்தரங்கு நடந்தது. இப்போது இங்கு நடைபெறுகிறது. இரண்டு கருத்தரங்கும் பயன் உள்ளவையாக இருந்தன.

மாதம் ஒரு முறை மாவட்டம் தோறும் இப்படிப்பட்ட கருத்தரங்கு நடத்த திட்டமிட்டு இருக்கிறோம். இந்த கருத்தரங்கில் செப்புசிலைகள் மண்பாண்டங்கள் ஆகியவைகளை ரசாயன முறையில் பாதுகாப்பது எப்படி என்பது சம்பந்தமாக கருத்து தெரிந்தார்கள்:


இவ்வாறு அவர் கூறினார்.

கருத்தரங்கு பற்றிய செய்தி

அந்தக் காலகட்டத்தில் அமுதசுரபி, கலைமகள் போன்ற இதழ்களின் தீபாவளி மலர்களில் வரலாறு சார்ந்த கட்டுரைகளை நான் எழுதுவது வழக்கம். அதே இதழ்களில் திரு.கலைக்கோவன் அவர்களின் கட்டுரைகளும் வெளிவரும். எனது கட்டுரைகளைப் படித்துப் பாராட்டுவார். இன்னும் நிறைய எழுதுங்கள் என்று உற்சாகப்படுத்துவார்.

தில்லை நகரில் உள்ள அவரது இல்லத்தில் அப்போது மாதந்தோறும் சொற்பொழிவுகள் நடக்கும். ஒரு முறை அந்தப் பொழிவுத் தொடரில் 'வரலாறு காட்டும் திருக்கோயில் திருப்பணிகள்' என்ற தலைப்பில் உரையாற்றினேன். பின்னர் டாக்டர்.மா.இராசமாணிக்கனார் வரலாற்று மையம் இயங்கிய மருத்துவமனை வளாகத்திலும் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றியுள்ளனர். 7.09.1991 அன்று 'கை நழுவிய கச்சத்தீவு' என்ற தலைப்பில்

தமிழ்ப்பல்கலைக்கழகப் பேராசிரியர் புலவர் செ.இராசு அவர்கள் உரையாற்றினார்கள். அந்நிகழ்ச்சிக்கு நான் தலைமை தாங்கினேன்.



ஆவணித் திங்கள் சிறப்புப் பொழிவு
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
உங்களை அன்புடன் வரவேற்கிறது

திருமதி. சிவகாமி வடிவேல் நினைவுப் பொழிவு

அறிமுகம் : செல்வி மு. நளினி எம். ஏ., எம். ஃபில்., டி. இ. ஏ.,
கல்வெட்டாய்வாளர், வரலாற்றாய்வு மையம்.

தலைவர் : திரு. கி. ஸ்ரீதரன் எம். ஏ.,
பதிவு அலுவலர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
திருச்சி.

கை நழுவிய கச்சத்தீவு

பொழிஞர் : பேரா. புலவர் செ. இராசு எம். ஏ.,
இணைப் பேராசிரியர், கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்,

நாள் : 7—9—91 சனி மாலை 6-00 மணி

இடம் : இதழியல் இளங்கோவன் அரங்கு
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி-620 017.

அடுத்த பொழிவு: 21—9—91

ஆவணக் கரப்பகங்களிலிருந்து அரும்பும் வரலாறு

— பேரா. முனைவர் பா. சுப்பிரமணியன் எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்–613 005,

★ தமிழகத் தொல்லியல் ஆய்வுக் கழகமும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையமும் இணைந்து நடத்தும் ஆவணம் ஆய்விதழுக்கு அருள் கூர்ந்து வாழ்நாள் உறுப்பினராகுங்கள். கட்டணம் ரூ. 250/- மட்டுமே.

மைய சொற்பொழிவு அழைப்பிதழ்

1984ல் தஞ்சையில் பதிவு அலுவலராகப் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அப்போது டாக்டரும் மைய ஆய்வாளர்களும் பழையாறையில் உள்ள பள்ளிப்படைக் கோயிலை ஆய்வு செய்யச் சென்றபோது நானும் உடன்செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த ஆய்வுப் பயணம் அனைவருக்குமே பயனுடைய பயணமாய் அமைந்தது.

திருச்சி வானொலி நிலையத்தாருக்காக தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் பற்றி மைய ஆய்வாளர்களால் 'உரைச்சித்திரம்' தயாரிக்கப்பட்ட பொழுது நானும் உடனிருந்து விவாதங்களில் பங்குபெற்றதும் நினைவில் உள்ளது. அதே வானொலியில் 'கோயில்கள் வளர்த்த கலைகள்' என்கிற தலைப்பில் அறிஞர்களில் தொடர் உரைகள் ஒலிபரப்பப்பட்டபோது 'இசைக்கலை' பற்றிய உரையை நான் தயாரித்தளித்தேன். என்னுடைய உரையை டாக்டர். கலைக்கோவன் செம்மைப்படுத்தித் தந்து உதவினார். எனது இந்த இசைக்கலை உரையின் சிறப்பைத் தனது எழில் கொஞ்சும் எறும்பியூர் என்ற நூலில் (பக்கம்-9) குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வு மையம் வெளியிடும் 'வரலாறு' இதழ் 8ல் (1988)ல் நான் ஆய்வு மேற்கொண்டு எழுதிய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 'சிலட்டூர் பொன்னம்பலநாத சுவாமி திருக்கோயில்' பற்றிய கட்டுரை வெளியானது.

1990ஆம் ஆண்டு முதல் திருச்சியில் தொல்லியல் துறை பதிவு அலுவலராகப் பணியாற்றினேன். அக்காலத்தில் திருவெறும்பூர் அருகே உள்ள திருநெடுங்களம் என்ற பாடல் பெற்ற கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் குறித்த கட்டுரைகளை திரு. கலைக்கோவன் அவர்களுடன் இணைந்து அக்கோயில் கும்பாபிஷேக மலரில் வெளியிட்டோம்.


1990-91 ஆண்டுகளில் திருவெறும்பூருக்கு அருகே உள்ள சோழமாதேவி கிராமத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலை ஆய்வு செய்து கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டன. டாக்டர்.மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையமும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும் இணைந்து இக்கோயிலில் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் S.R.C. மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணி மாணவிகளால் உழவாரப்பணி மேற்கொள்ளப்பட்டது. அக்கோயிலின் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுக்கள் குறித்து ஆய்வு மையத்தில் ஒரு சொற்பொழிவாற்றினேன். அந்நிகழ்ச்சிக்கு கல்வெட்டறிஞர் திரு.எ.சுப்பராயுலு அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். தற்பொழுது சோழமாதேவி திருக்கோயில் வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் இரா.கலைக்கோவனின் உரையாற்றலும் எழுத்தாற்றலும் சிறப்பானவை. அது அவருக்கு இறைவன் அளித்த கொடை எனலாம். சந்தேகம் என்று வந்தால் அதனைக் குறித்து தயக்கமின்றி அவரிடம் உரையாடலாம். அதைப்போலவே ஆய்வில் தவறுகள் இருப்பதாகக் கருதினால் சுட்டிக்காட்டுவதில் தயக்கம் இல்லாதவர். கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாகத் தமது தந்தையாரின் பெயரால் அவர் நடத்தி வரும் டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் தொய்வுறாமல் தமிழக வரலாற்றுக்கு அரிய பெரிய தொண்டாற்றி வருகிறதெனில் மிகையில்லை.

சிலப்பதிகாரக் காட்சிகள் (1994)

ஆசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B2%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D



முன்னுரை

சிலப்பதிக்காரக் காட்சிகள் என்னும் பெயர் கொண்ட இச்சிறு நூல், முத்தமிழ்க் காப்பியம் ஆகிய சிலப்பதிகாரம் என்னும் சீரிய செந்தமிழ் நூலில் உள்ள கோவலன்-கண்ணகி வரலாற்றைப் பல காட்சிகளாகப் பகுத்துக் கூறுவதாகும். காட்சிகள், தேவையான இடங்கள் விளக்கமாகவும் தேவையற்ற செய்திகள் சுருக்கமாகவும் அமையப் பெற்றவை. பெரும் புகழுடன் இருந்து கடலுக்கு இரையான பூம்புகார்ச் சிறப்பு, அக்கால மக்கள் வாழ்க்கை நிலை, சமுதாய நிலை, அரசியல் நிலை. பழக்க வழக்கங்கள், அக்காலக் கலைகள் முதலிய வற்றைப் பற்றிய பல விவரங்களை இச்சிறு நூல் கொண்டு உணர்தல் கூடும்.

பொருளடக்கம்

மொஹெஞ்சொ-தரோ அல்லது
சிந்துவெளி நாகரிகம் (1941)

ஆசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%AE%E0%AF%8A%E0%AE%B9%E0%AF%86%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%8A-%E0%AE%A4%E0%AE%B0%E0%AF%8B_%E0%AE%85%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%A4%E0%AF%81_%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B3%E0%AE%BF_%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%95%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D



பதிப்புரை

வளத்துக்கும் வாணிகத்துக்கும் இந்தியா எப்போதும் உலக மக்களின் கண்ணில் நிழலாடிக்கொண்டிருக்கிறது; அப்படியே கலை, நாகரிகம் முதலிய பல தலையான ஆராய்ச்சிகளுக்கும் உலக அறிஞர்களின் உள்ளத்தை என்றும் அது கவர்ந்து கொண்டிருக்கின்றது. இந்திய நாட்டின் எல்லை, இந்திய மக்களின் பன்னுற்றுக்கணக்கான சாதி சமய மொழிப் பிரிவுகள், அவ்வவற்றின் பழைமை பெருமை, வளர்ச்சி தளர்ச்சிகள் முதலிய கருத்துக்களைக் குறித்து மேலைநாட்டவரும் கீழைநாட்டவரும் பல காலமாகவே ஆராய்ந்து வருகின்றனர். கடலாழங் காண்பதும் இந்திய் நாகரிக ஆழங் காண்பதும் ஒன்று.

சில காலத்துக்குமுன் வரையில் ஆராய்ச்சியாளர் இந்திய நிலைகளைப் பற்றிப் பற்பல கருத்துடையராயிருந்தனர். ‘இந்திய

மக்களில் ஆரிய ரென்பவரே நாகரிகமுடையவர்; அவரது மொழியே வடமொழி யென்பது; அதுவே தமிழ் உட்பட எல்லா இந்திய மொழிகளுக்குந் தாய்; ஆரிய நாகரிகமே உலக நாகரிகங்கட்கு அடிப்படை' என்பன அக்கருத்துக்களிற் சில. ஆராய்ச்சியாளர் கண்ணுக்கு வடமொழி நூல்களே இந்தியாவின் தலை நூல்கள் என்று அப்போது காணப்பட்டு வந்தமையே அதற்குக் காரணம்.

பின்பு, பண்டைக் காலத்தில் இயற்றப்பட்ட, தமிழ் நூல்கள் சில வெளிப்படலாயின. அவற்றிலிருந்து, தமிழ் மொழியின் பழைமையும் செவ்வியும் ஆராயப்பட்டு, இதற்கு ஆரியமொழி தாய் அன்று என்பதும், இம்மொழியாளரின் நாகரிகம் ஆரிய நாகரிகத்தினும் வேறு என்பதும், உயர்ந்தது என்பதும், வேறு சிலவும் விளங்கின.

இதற்குள் நூலாராய்ச்சியே யல்லாமல், ஞால ஆராய்ச்சி, கல்வெட்டு ஆராய்ச்சி, அகப்பொரு ளாராய்ச்சி முதலான பலவகை ஆராய்ச்சிகள் வளர்ச்சிபெறலாயின. இவற்றின் பயனாக, ஒரு காலத்தில் இந்தியாவின் வடபகுதியும், இமயமலையும் கடலுள் இருந்தன; அப்போது இந்தியாவின் குமரிமுனைக்குத் தெற்கே இந்துமாக் கடலில் குமரிக் கண்டம் என்று ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்தது; உலகத்திலேயே மக்கட் பிறவியின் தோற்றம் முதல்முதல் அக் குமரிக் கண்டத்திலேயே உண்டாயிற்று; பின்பு, அக்கண்டம் சிறிது சிறிதாகக் கடலுள். ஆழ்ந்து வடக்கே இமயமலை எழுந்தபோது, அக் கண்டத்திலிருந்த மக்கள் வடக்கே வந்து உலகெங்கும் பரவினர். இப்போது தென்னிந்தியாவாக உள்ள திராவிட நிலப்பகுதி எஞ்ஞான்றும் அழியாத மிகப்பழைய நிலமாதலின், வடக்கிலும் உலகத்திலும் பரவிய மக்கள் இத்திராவிட மக்களின் முன்னோரே யாகின்றனர்; இமய மலைக்கு வடக்கேயும் வடமேற்கேயும் சென்ற அம் முன்னோரே பின்னொருகால் வேற்றுமொழியாளர்போல மாறி மீண்டும் இந்தியாவுக்குள் புகுந்தபோது, அவர்கள் அங்கங்குமிருந்து வந்தவராகக் கூற இடமாயிற்றேயன்றி வேறில்லை; ஆகவே திராவிட நாகரிகமே உலக நாகரிகத்துக்கு அடிப்படை என்னும் உண்மைகளெல்லாம் திட்டமாகக் கண்டுபிடிக்கப் பெற்றன; தமிழர்களின் நல்வினைப்பயனால் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட சங்கத் தமிழ் நூல்கள் பல இக்காலங்களில் மேலுமேலும் வெளிவந்து, அவற்றின் ஆழ்ந்த அரிய ஆராய்ச்சிகளாலும் மேலுண்மைகள் நன்றாக வலுப்பெறலாயின; குமரிக்கண்ட நாகரிகம் இக்கால நாகரிகத்தினும் உயர்ந்ததென்பது, தமிழ்மொழியின் பெருமை அக்காலத்திலேயே இன்னும் மிகுந்திருந்ததென்பதும், தமிழ்வளர்த்த தமிழ்ச் சங்கங்களில் முதற்சங்கம் குமரிக் கண்டத்திலிருந்தது என்பதும், இதுபோன்ற பல அருங்குறிப்புகளெல்லாமும் சங்க நூலாராய்ச்சிகளிலிருந்து வெளிப்பட்டன.

எனினும், காண்டல், கருதல், உரையளவைகளில், ஆராய்ச்சி என்பது கருதலளவையிலும் சங்கத் தமிழ் நூல்கள் உரையளவையிலும் அடங்குதலின் காண்டலளவையிலுந்தக்க சான்றுகள் கிடைக்குமாயின், இந்தியா முழுவதுமே ஒரு காலத்தில் திராவிட நாடு; திராவிட மக்களே பிற்காலத்திற் பல்வேறு இந்தியக் கிளையினராயினர் திராவிடமொழியே திரிந்து திரிந்து பல்வேறு இந்திய மொழிகளாயிற்று: திராவிட நாகரிகமே உலக நாகரிகத்திற்கு அடிப்படை இன்னும் திராவிட நாகரிகமே உயர்ந்ததாக உள்ளது' என்னும் இவ்வளவு பெரிய புதை பொருளுண்மைகளை மிகத் தெளிவாகத் துணிந்து கொள்வதற்கு ஐயுறவில்லாத நிலைப்பு ஏற்படும். ஒரு கருத்தைத் துணிவதற்கு இங்ஙனம் மூவகையளவைகளும் முதன்மையானவை.

'தமிழ்' என்பதைப் பிறர் 'திராவிடம்' என்றனர்; தமிழ் மக்கள் அங்கங்கும் போக்குவரவின்றித் தங்கியகாலத்தில் அவர்கள் தமிழ்மொழியே பல்வேறு வகையான இந்திய மொழிகளாகத் திரிந்து நின்றன; ஒன்றோடொன்று கலந்து பின்னும் பலவாயின. மிகுதியாகத் திரிந்துவிட்டவை வங்காளம் முதலிய வட இந்திய மொழிகள்; ஒரளவில் திரிந்தவை தெலுங்கு முதலிய திராவிடமொழிகள்; மொழிதிரியவே தமிழ்மக்களும் அவ்வம் மொழிக் குரியவராய் வட இந்தியரும் தென்னிந்தியருமாகத் திரிந்து பல சாதியினராயினர்; இதனால் இந்தியர் யார் என்பதே தெரிந்து கொள்வது அரிதாயிற்று.

இத்தகைய உற்ற நேரத்திலேதான், இந்தியாவின் வடமேற்கே சிந்து ஆற்றின் கரைமருங்கு இற்றைக்கு 5000 ஆண்டுகட்குமுன் சிறந்த திராவிட நாகரிகத்தோடு விளங்கியிருந்து பின் மண்மூடுண்ட '**மொஹெஞ்சொ-தரோ**' '**ஹரப்பா**' முதலிய பெரு நகரங்கள், அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்டன. தக்க நாகரிகச் சான்றுகள் அவற்றிலிருந்து நேரிற் கண்டெடுக்கப்பட்டுச் சிறந்த ஆராய்ச்சி யறிஞர்களால் நன்கு சோதனை செய்யப்பெற்றன: சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்பது காண்டலளவையாலும் மலையிலக்காகத் துலங்குவதாயிற்று. இற்றைக்கு 4500 ஆண்டுகட்கு முன் இந்தியா முழுமையும் திராவிடமே யென்று விளக்கி, நிலப்படப் புத்தகத்திற் (Atlas) படமும் எழுதப்பெற்றிருக்கிறது.

திராவிடர் இப்போது எந்நிலையி லிருக்கின்றனர். தம் முன் நிலைகளைச் சிறிதேனும் எண்ணிப் பார்ப்பாராயின், இந்தியாவில் சாதியாலும் மொழியாலும் சமயத்தாலும் பல பிரிவினராய் ஒற்றுமையின்றி எழுச்சியின்றி மேலுமிருக்க ஒருப்படுவரோ! திராவிடர் தம் தொன்மையையும் வன்மையையும் உலகறிய வைத்து வாழவன்றோ முற்படுவர்! இவ் வுணர்ச்சியும் முயற்சியும் உண்டாகும் பொருட்டே இம் மொஹஞ்சொ-தரோ ஆராய்ச்சிகளை


விளக்கமாகத் தமிழ்மொழியில் எழுதுவித்து வெளியிடுகின்றோம். இவ் வெளியீடு அக் கருத்தைச் செவ்வனம் நிறைவேற்றுமென்று நம்புகிறோம்.

நாங்கள் விரும்பியதற்கு ஏற்ப, இந்நூலைப் பல தலைப்புகளில் தகுதியாகப் பாகுபாடு செய்து பன்னூல் ஆராய்ச்சிகளையும் நன்றாகக் கோவைசெய்து பொருத்தி ஏற்ற மேற்கோட் குறிப்புக்களுடன் மிகவும் தெளிவாக மிக எளிய தமிழ் நடையில் நல்லுழைப்போடு எழுதியுதவிய இதன் ஆசிரியர் டாக்டர். **மா. இராசமாணிக்கனார்**, M.A., M.O.L., L.T., Ph.D. அவர்களின் தொண்டு தமிழகத்தாராற் பெரிதும் பாராட்டற் பாலதாகும். அச்சிடுங் காலத்தில், இந்நூலை நன்கு பார்வையிட்டுதவியவர் **தருமையாதீன வித்துவான்**, **திருவாளர். காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை** B.A. அவர்களாவர். இவ்வறிஞரிருவர்க்கும் எங்கள் நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

https://ta.wikisource.org/wiki/%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9C%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%81%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D



இராஜன் எளிய வாசிப்பு வழி வரிசை

இவ்வாசக வரிசை சிறுவர், சிறுமியர் அகமகிழ்ந்து வாசித்துப் படிப்படியாக வாசிப்பில் திறமை பெறுவதற்குத் தகுந்த படித்தர முறையில் எழுதப்பட்டுள்ளது. இவ்வரிசையில் அமைந்துள்ள கதைகள் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிவன. கதைகளுட் சில பழையனவாயினும், புதிய முறையில் சிறுவர், சிறுமியர்க்கு மேலும், மேலும் வாசிக்க வேண்டும் என்னும் விருப்பத்தை உண்டாக்கும் வகையில், வாசிக்கும் மாணவர்களின் வகுப்புத் தரத்திற்கு ஏற்றவாறு எழுதப்பட்டுள்ளன.

வாசிக்கும் கதைகளின் கூறுபாடுகள் சிறுவர், சிறுமியர் மனத்திற் பசுமரத்து ஆணி போல இனிது பதியத் தகுந்த வகையில் விளக்கச் சித்திரங்கள் பல சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தகைய கதைகளை வெளியிடுவதில் வேண்டுந் திருத்தங்களைச் செய்து உதவிய **வித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளையவர்**களுக்கு என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையோம்.

கல்வித் துறையில் ஈடுபட்டுத் தமிழ் நாட்டுத் தனிப் பெருஞ்செல்வங்களாகிய சிறுவர், சிறுமியர் கல்வி முன்னேற்றத்திற் கண்ணுங்கருத்துமாய் உழைத்து வரும் அன்பர்கள், இவ்வாசக வரிசையைப் பலர்க்கும் பயன்படச் செய்து, எம்மை ஊக்கியருள வேண்டுகிறோம்.

பொருளடக்கம்

பாடம்பக்கம்

சேக்கிழார் (1947)

ஆசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AF%87%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D



முகவுரை

தமிழ்ப் புலவர் வரலாறுகள் நல்ல ஆராயச்சி முறையைத் தழுவி வெளிவருதல் அருமையாக இருக்கிறது. ஆராய்ச்சிக் காலமாகிய இக்காலத்தில் வெளிவரும் நூல்கள் **கல்வெட்டு-சரித்திரம்-இலக்கியம்** இவற்றை அடிப் படையாகக் கொண்டு வெளிவருதலே நல்லது. இந்த முறையில் அமைந்திருப்பதே இச்சிறு நூல்.

சேக்கிழார் ஒரு வேளாளர்; தமிழ்ப் புல்வர்; அரசியல் அறிஞர்; கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் பேரரசானாக இருந்த இரண்டாம் குலோத்துங்கனின் **முதல் அமைச்சர்** ஆவர். அப் பெரியார் நாயன்மார் வரலாறுகளைப் பெருங் காவியமாகப் பாடின. பெரும் புலவர். அக் காவியமே **பெரிய புராணம்** என்பது.

சேக்கிழார் முதல் அமைச்சராக இருந்தமையால் ஸ்தல யாத்திரை செய்தார்; நாயன்மார் வரலாறுகள் பற்றிய மூலங்களைச் சேகரித்தார்; கல்வெட்டுகளை ஆராய்ந்தார்; கர்ண பரம்பரைச் செய்திகளை ஆராய்ந் தார்; இலக்கிய நூல்களைப் படித்தார்; இவை அனைத்தின் துணையைக் கொண்டும் அரிய காவியம்பாடினார்.

இச்சிறு நூலில் சேக்கிழார் வரலாறு அவர் அமைச்சராக இருந்தமை அழியாப் புகழ் பெற்ற பெரிய புராணம் பாடினமை என்பன எளிய நடையில் இள மாணவரை உளங்கொண்டு குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தமிழ்ப் புலவர் வரலாறும் இவ்வாறு தனித்தனி நூலாக வருதல் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்றதாகும். திருவருள் துணை கூட்டுமாக ! .

சேக்கிழார் அகம்,
சென்னை.


மா. இராசமாணிக்கம்

பொருளடக்கம்

தமிழ் மொழி இலக்கிய வரலாறு (1996)

ஆசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%AE%E0%AF%8A%E0%AE%B4%E0%AE%BF_%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81



முகவுரை

கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் **பெரிப்ளூஸ் ஆசிரியர், பிளைநி, தாலமி** என்ற கிரேக்கர் மூவரும் தமிழகத்து உள்நாட்டு ஊர்களைப் பற்றியும் துறைமுக நகரங்களைப் பற்றியும் மேல் நாடுகள் தமிழகத்தோடு செய்து வந்த வாணிகத்தைப் பற்றியும் சில செய்திகளை எழுதியுள்ளனர். பழந்தமிழ் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய நூல்களில் யவனர் பாவைவிளக்கு, யவனர் வாணிகம். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரைப் பிடித்து அடக்கினமை போன்ற செய்திகள் காணப்படுகின்றன. கி. மு. முதல் நூற்றாண்டிலும் பின் நூற்றாண்டுகளிலும் வழங்கப்பட்ட ரோம நாணயங்கள் மதுரை முதலிய இடங்களில் கிடைத்துள்ளன.

இச்சான்றுகளைக் கொண்டு எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் **கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் செய்யப் பட்டவை என்னலாம்; சங்ககாலமே கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகள் என்னலாம்**[1] என்று வரலாற்று ஆசிரியர் சிலரும் தமிழ்ப் பேராசிரியர் சிலரும் தம் ஆராய்ச்சி நூல்களில் எழுதிவிட்டனர். அவர்கள் கூற்றை உறுதியாகக்கொண்டு பலரும் சங்ககாலம் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தது என்று கூறியும் எழுதியும் வருகின்றனர்.

தொகை நூல்களிலுள்ள செய்யுட்கள் ஒருவர் பாடியவை அல்ல. ஏறத்தாழப் **புலவர் ஐந்நூற்றுவர்** பாடியவை. அவற்றுள் யவனர் தந்த பாவை விளக்குப் பற்றியும், யவனரைப்பற்றியும் வருகின்ற செய்யுட்கள் மிகச் சிலவே யாகும். புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை இவற்றில் காணப்படும் பாரதப்போர், நந்தர்கள் பற்றிய செய்திகள், மோரியர் படையெடுப்பு ஆகியவற்றை நோக்க, இன்றுள்ள சங்கச் செய்யுட்களுள் சில கிறிஸ்தும் பெருமானுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளையும் சேர்ந்தவை என்னும் உண்மை உணரப்படும்.

மேலும் ஒரு மொழிக்குரிய நூல்கள் திடீரென்று கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளை மட்டும் குறிக்குமென்றோ, அந்நூற்றாண்டுகளில் செய்யப்பெற்ற பாடல்கள் மட்டுமே கிடைக்கக்கூடுமென்றோ எண்ணுதல் பொருத்தமற்றது.

செங்குட்டுவன் செய்த பத்தினி விழாவிற்குக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் வந்திருந்தான் என்பது சிலப் புதிகாரம் கூறும் செய்தியாகும். அக்கயவாகுவின் காலம் கி. பி. 113-136 என்று அண்மையில் வெளிவந்த இலங்கை வரலாற்று நூல் தெரிவிக்கின்றது. எனவே, செங்குட்டுவன் காலமும் அவன் தம்பியாரான இளங்கோவடிகள் காலமும் அவ்விருவருக்கும் நண்பராகிய ‘மணிமேகலை’ ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் காலமும் அதுவேயாகும் என்பது வெள்ளிடை மலை.

மணிமேகலையில், “தெய்வம் தொழா அள்” என்று தொடங்கும் குறள் முழுமையும் ஆளப்பட்டுள்ளதை அனை வரும் அறிவர். மேலும், சிலப்பதிகாரத்தில் குறட் கருத்துக்களும் தொடர்களும் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளன. இவற்றை நோக்க, திருக்குறள் இவ்விரு நூல்களுக்கும் முற்பட்டது என்பது தெளிவாகும்.

திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய சங்க நூல்களுக்கெல்லாம் முற்பட்டது தொல்காப்பியம் என்பதை மகாவித்துவான் இரா. இராகவய்யங்கார், டாக்டர் சோமசுந்தர பாரதியார், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் திரு. க. வெள்ளைவாரணனார், பேராசிரியர் சி. இலக்குவனார், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் ஆகிய அறிஞர்கள் தம் ஆராய்ச்சி மிக்க நூல்களில் நன்முறையில் வெளியிட்டுள்ளனர். வரலாற்று முறைப்படி ஆராயின், தொல்காப்பியத்தின் குறைந்தகால எல்லை ஏறத்தாழக் கி. மு. 300 என்று கூறலாம்.[2] இதற்குக் கீழே தொல்காப்பியத்தின் காலத்தைக் கொண்டு செல்வது வரலாற்று உண்மைக்கும் இலக்கிய ஆராய்ச்சிக்கும் முரண்பட்டதாகும்.

ஏறத்தாழக் கி. மு. 300இல் செய்யப்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில், தொல்காப்பியர் தமக்கு முன்பும் தம் காலத்திலும் இருந்த இலக்கண நூல்களைச் செய்த ஆசிரியர் பலரை ஏறத்தாழ இருநூற்றைம்பது இடங்களில், “என்ப”, “என்மனார் புலவர்”, “யாப்பறி புலவர்” எனப் பலவாறு கூறியுள்ளார். எனவே, தொல்காப்பியம் செய்வதற்கு உறுதுணையாய் இருந்த இலக்கண நூல்கள் மிகப்பல என்பது தெளிவாகும். இங்ஙனமே தொல்காப்பியர் காலத்தில் மிகப்பல இலக்கிய நூல்களும் இருந்தன என்பதை அவருடைய செய்யுளியல் நூற்பாக்கள் நன்கு தெரிவிக்கின்றன. தொல்காப்பியர் காலத்திலேயே (கி. மு. 300) பல இலக்கண நூல்களும் பல இலக்கிய நூல்களும் இருந்தன எனில், தமிழ் மொழியின் தொன்மையை என்னென்பது!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியினரான தமிழர்தம் மொழியாகிய தமிழின் தோற்றத்தை அறியவல்லார் யாவர்? இதனாலன்றோ கல்வியிற் சிறந்த கம்பர் பெருமான், “என்றுமுள தென்றமிழ்” என இயம்பி மகிழ்ந்தார்!

இத்துணை உண்மைகளையும் மறந்து அல்லது மறைத்துச் ‘சங்ககாலம்’ கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தது. தொல்காப்பியம் தொகை நூல்களுக்குப் பிற்பட்டது என்று தம் மனம் போனவாறு ஒரு சிலர் எழுதுதல் உண்மை ஆராய்ச்சிக்கு மாறுபட்டதாகும்.

கி. பி. 4ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சியில் பல்லவ அரசு ஏற்பட்டது என்பது வரலாற்று உண்மை.

பல்லவர் ஏறத்தாழக் கி. பி. 300 முதல் கி. பி. 875 வரையில் தமிழகத்தில் பேரரசராய் இருந்தனர் என்பதும் வரலாறு கூறும் உண்மையாகும். தொல்காப்பியம் முதல் மணி மேகலை ஈறாக உள்ள சங்க நூல்களில் இப்பல்லவர்களைப் பற்றிய குறிப்பு ஒரு சிறிதும் காணப்படவில்லை; காஞ்சியில் திரையர் இருந்தமைக்கும் சோழர் இருந்தமைக்குமே சான்றுகள் காணப்படுகின்றன. எனவே, **இந்நூல்கள் அனைத்தும் பல்லவர்க்கு முற்பட்ட நூல்கள்** என்பது தெளிவாகும். ஆகவே, **சங்ககாலத்தின் இறுதி எல்லை ஏறத்தாழக் கி. பி. 300** என்று கொள்ளப்பட்டது. அதன் மேல் எல்லை இன்றுள்ள சான்றுகளைக் கொண்டு வரையறுக்க இயலவில்லை. புறநானூற்றின் துணையைக் கொண்டு அதன் மேலெல்லையை ஏறத்தாழக் கி. மு. 1000 என்று கூறலாம். அக்காலத்திலும் கடல் வாணிகம் சிறப்புற நடைபெற்றது. இன்று கிடைத்துள்ள இலக்கியம் முதலிய சான்றுகளைக் கொண்டு, **ஏறத்தாழக் கி. மு. ஆயிரத்திலிருந்து கி. பி. 300 வரையில் இருந்த பரந்துபட்ட காலமே சங்ககாலம் என்று**

கூறலாம். இந்த அடிப்படை உண்மையை உள்ளத்திற் கொள்ளின், நூல்களின் காலத்தைப் பற்றிய குழப்புமே தோன்றாது. தொகை நூற்பாடல்கள் கி. மு.விலும் பாடப் பட்டிருக்கலாம், கி. பி.யிலும் பாடப்பட்டிருக்கலாம் என்னும் உண்மையை உணர்தல் நல்லது.

காய்தல் உவத்தல் இன்றித் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை நன்கு கற்று, கிடைக்கும் உண்மைகளை ஒன்று சேர்த்து, பிற நாட்டார் குறிப்புகளையும் இந்திய வரலாற்றினையும் ஒப்புநோக்கிச் **சாத்திரீய முறையில் (Scientific Method)** ஒரு முடிவுக்கு வருதலே உண்மை ஆராய்ச்சி எனப்படும். அத்தகைய உண்மை ஆராய்ச்சியே என்றும் நிலைத் திருக்கும்.

மிகப் பழைய காலம் முதல் ஏறத்தாழக் கி. பி. 300 வரையில் தமிழகம் சேர, சோழ, பாண்டியர் ஆட்சியில் இருந்தது என்பது தென்னிந்திய வரலாற்றால் தெளிவாகத் தெரிகின்றது. அப்பரந்துபட்ட காலத்தில் பாண்டியும் **தமிழ்ச் சங்கத்தை** வைத்துத் தமிழ் வளர்த்து வந்தனர் என்பது சங்க நூல்களால்[3] தெளிவாகத் தெரிகின்றது. ஆதலால் இக்காலம் சங்ககாலம் என்று ஆராய்ச்சியாளரால் கூறப்படுகின்றது.

ஏறத்தாழக் கி. பி. 300 முதல் கி. பி. 875 வரையில் தமிழகத்தில் பல்லவரும் பாண்டியரும் சிறப்புற்றிருந்தனர். அக்காலத்தில் சைவமும் வைணவமும் சமணத்தையும் பௌத்தத்தையும் எதிர்த்துப் போரிட்டன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் முறையே சைவத்தையும் வைணவத்தையும் தம் திருப்பாடல்களால் வளர்த்தனர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை இப்பல்லவர் காலத்தில் தோன்றியவை.

பல்லவர்க்குப் பின்பு பேரரசராய் விளக்கமுற்ற பிற்காலச் சோழர்கள் சைவ வைணவ சமயங்களை நன்கு வளர்த்ததோடு சமணர்க்கும் பௌத்தர்க்கும் வேண்டிய அளவு உதவி செய்தனர். இச்சோழர் ஏறத்தாழக் கி. பி. 875 முதல் 1300 வரையில் நாடாண்டனர். இவர்கள் காலத்தில் சமய வளர்ச்சி மிகுதியாகக் கவனிக்கப்பட்டது. எனவே, பல்லவர் சோழர் காலங்களைச் சமய வளர்ச்சிக் காலம் அல்லது இடைக்காலம் என்று கூறலாம். இக்காலத்தில் சிந்தாமணி, பெரிய புராணம், கம்ப ராமாயணம் போன்ற பெரு நூல்கள் தோன்றின; இவற்றோடு அரசியல் தொடர்புடைய கலிங்கத்துப்பரணி, மூவருலா போன்ற சிறு நூல்களும் தோன்றின யாப்பருங்கலம், வீரசோழியம், தண்டியலங்காரம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களும் தோன்றின.

கி. பி. 1300க்குப் பிறகு தமிழகம் விசயநகர வேந்தர் ஆட்சிக்கு உட்பட்டது; பின்பு நாயக்கர் ஆட்சிக்கும் கருநாடக நவாபுகள் ஆட்சிக்கும் உட்பட்டது; இறுதியில் ஆங்கிலேயர்

ஆட்சிக்கு உட்பட்டது. இக்காலத்தில் (1300-1947) தமிழைத் தக்கவாறு ஆதரித்தவர் மிகச் சிலர். அதனால் எண்ணிறந்த தலபுராணங்கள், உலா, தூது போன்ற சிற்றிலக்கியங்கள், இசுலாத்தையும் கிறிஸ்துவத்தையும் பற்றிய பெருநூல்கள் சிறு நூல்கள், திருவருட்பா, மனோன்மணியம் போன்ற நூல்கள் தோன்றின. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்பு அச்சுப் பொறியின் வாயிலாகச் செய்தித் தாள்களும் நூல்களும் அச்சிடப் பெற்றன. பள்ளிக் கூடங்கள் பெருகப் பெருக உரைநடை நூல்களும் பெருகின. 20ஆம் நூற்றாண்டில் உரைநடை நூல்களும் மொழி பெயர்ப்பு நூல்களும் பெருங் கதைகளும் சிறு கதைகளும் கவிதைகளும் வளர்பிறைபோல வளர்வனவாயின. இக் காலத்தைத் தமிழிலக்கிய வரலாற்றில் பிற்காலம் என்னலாம்.

எனவே, தமிழ் இலக்கிய காலத்தைச் (1) **சங்ககர்லம், (2) இடைக்காலம், (3) பிற்காலம்** என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பது பொருத்தமாகும். இம்மூன்று பிரிவு களுள் சங்ககாலமாகிய முதற் பிரிவில் அமைந்த நூல்களைப் பற்றிய விளக்கத்தை இந்நூலிற் காணலாம்.

தொல்காப்பியம் இன்னது-அதன் காலம் இன்னது-அதில் கூறப்பட்டுள்ள செய்திகள் இன்னவை-அவற்றாலறியப்படும் தமிழர் வாழ்க்கை முறை நாகரிகம் பண்பாடு இன்னவை-தொல்காப்பியத்தால் அறியப்படும் மொழி வரலாறு இது-இலக்கிய வரலாறு இது என்பன போன்ற பல விவரங்களும் இலக்கிய வரலாற்றில் இடம் பெற வேண்டும்; ஒவ்வொரு நூலைப்பற்றிய இத்தகைய விவரங்கள் இலக்கிய வரலாறு படிப்பவர்க்கு அந்நூலைப்பற்றி ஒரளவு அறிவைத் தரும். இந்த முறையில் இலக்கிய வரலாறு எழுதல் வேண்டும் என்ற எண்ணம் பல்லாண்டுகளாக என்னுள்ளத்தில் வேரூன்றி வளர்ந்து வந்தது.

ஆங்கில இலக்கிய வரலாறு பற்றிய நூல்களில் ஒரு நூலின் ஆசிரியர் பெயர், அவரது வாழ்க்கைச் சுருக்கம், காலம், அவர் செய்த நூல்கள், அந்நூற் செய்திகளின் சுருக்கம், அவை பற்றிய இலக்கிய வரலாற்று ஆசிரியர் கருத்துக்கள் என்னும் முறையில் செய்திகள் காணப்படுகின்றன. இம்முறை வரவேற்கத்தக்கது.

ஏறத்தாழ இம்முறையைத் தழுவி வங்கமொழி இலக்கிய வரலாறு திருவாளர் **தினேஷ் சந்திர சென்** என்பவரால் 840 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் விலை ரூபாய் 25. மேலே

காட்டப்பெற்ற முறையைத் தழுவித் தமிழிலக்கிய வரலாற்றை எழுத வேண்டும் என்னும் எண்ணம் எனக்குண்டாயிற்று.

யான் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாகவும் தமிழ்த்துறைத் தலைவனாகவும் இருந்த போது, தமிழிலக்கியம் பற்றி ஆறு சொற்பொழிவுகள் மதுரை மாவட்ட ஆசிரியர்களுக்கு ஆற்றவேண்டும் என்று **கல்வித்துறை இயக்குநர் பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு** அவர்கள் ஆணை பிறப்பித்தனர், யான் அவ்வாணையின்படி மதுரை யூனியன் கிறிஸ்தியன் உயர் நிலைப்பள்ளியில் 1956 ஏப்ரலில் ஆறு சொற்பொழிவுகள் ஆற்றினேன். என் சொற்பொழிவு முறையில் நூலை எழுதும்படி ஆசிரியர் பலர் வற்புறுத்தினர். யான் அவர்கள் விருப்பத்திற்கிசைந்து அச்சொற்பொழிவுகளை அடிப்படையாகக்கொண்டு விரிந்த முறையில் தமிழிலக்கிய வரலாற்றை எழுதத் துணிந்தேன்.

பெரும்பாலரான தமிழ் மக்களுக்கு ஒவ்வொரு தமிழிலக்கியத்தையும் படித்துச் செய்திகளையறியப் போதிய நேரமோ வாய்ப்போ இல்லை ஆதலின் ஒவ்வொரு நூலைப்பற்றியும் சுருங்கிய முறையில் செய்திகளையறிய இலக்கிய வரலாற்று நூல் துணைபுரிய வேண்டும்-அந்நிலையிற்றான் அவர்கள் ஒவ்வொரு காலத் தமிழர் நாகரிகத்தையும் மொழி வளர்ச்சியினையும் மொழி மாறுதல்களையும் அறிதல் கூடும் என்னும் எண்ணம் உந்தியதால், ஒவ்வொரு நூலைப்பற்றியும் தேவையான செய்திகளை மட்டும் தருதல் நன்றெனத் துணிந்தேன்.

இம்முறையினால் நூல், அளவில் பெருகலாயிற்று. அதனால் சங்ககால இலக்கிய வரலாறு மட்டும் 600 பக்க்

அளவில் ஒரு தனி நூலாக உருவெடுத்தது. நூல் அளவில் பெருகின் விலையும் மிகும். ஆதலால் யான் முதலில் விரிவாய் எழுதிய நூலை மிகத் தேவையான செய்திகளை மட்டும் கொண்ட நூலாகச் சுருக்கினேன். அங்ஙனம் சுருக்கப்பட்ட நூலே இது.

இந்நூலில் மொழியின் தோற்றம் வளர்ச்சி-இலக்கியம்-இலக்கியத் தோற்றம் என்பவை முன்னுரைச் செய்திகளாகத் தரப்பட்டுள்ளன. அடுத்துச் சங்ககால இலக்கியத்திற்கு இந்திய வரலாறும் இலங்கை வரலாறும் அயல்நாட்டார் குறிப்புகளும் எந்த அளவு துணை செய்கின்றன என்பது விளக்கப்பட்டுள்ளது.

அடுத்து முச்சங்கங்கள் வரலாறு-மதுரையில் தமிழ்ச் சங்கம் என்பவை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துத் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு,

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களின் காலமும், நூற் செய்திகளும் பிறவும் விளக்கப்பட்டுள்ளன.

"இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு நூலின் காலத்தையும் ஆராய்ந்து முடிவு கட்டுதல் இன்றியமையாதது. ஆயின், இக்கால ஆராய்ச்சி மட்டும் இலக்கிய வரலாறு ஆகாது. வரலாற்றில் பல காலங்கள் உண்டு ஒருகால இலக்கியத்திற்கும் அடுத்தகால இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுதல் வேண்டும். ஒரு காலத்து இலக்கிய நூல்கள் எவ்வெச்சூழ்நிலையில் உருவாகியுள்ளன என்பதும் விளக்கப்படல் வேண்டும். ஒரு காலத்துக்கு உரிய நூல்களை அக்கால அரசியல், பொருளாதார இயல், சமூகஇயல் முதலியவை எங்ஙனம் வளர்த்தன என்னும் உண்மையும் விளக்கப்படல் வேண்டும்.

“காலக் கணக்கு மட்டும் கூறுவது நன்றன்று. ஒரு மொழி பேசிய மக்களினம், அவ்வினத்துப் பிரிவுகள், அவ்வினத்தவர் தொழில்கள், வாழ்க்கை முறை இவற்றை ஆராய்ந்து சமூக மாறுதலுக்குரிய நிலைமைகளை விளக்கி, வரலாற்றுப் பின்னணியில் இலக்கிய வளர்ச்சியை விளக்குதல் வேண்டும்.

“மனிதனது வாழ்க்கையில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. அவ்வாறே இலக்கிய உலகத்திலும் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. மாறுதல்கள் இருப்பினும் ஒருமைப்பாடும் காணப்படும். மணிகள் பல நிறத்தனவாயினும் அவை கோக்கப்பெறும் நூல் ஒன்றியிருப்பது போல-வேறுபாடுகளுக்கிடையே ஒருமைப்பாடு இருக்கும். இலக்கிய உலகிலும் அவ்வொருமைப்பாடு உண்டு. அதனைச் சுட்டிக் காட்டுவது இலக்கிய வரலாற்றாசிரியரது கடமையாகும்.”

திரு. வி. சுப்பராவ் என்ற தெலுங்குப் புலவர் 1920 இல் எழுதிய “ஆந்திர வான்மய சரித்திரம்” என்னும் தெலுங்கு இலக்கிய வரலாற்று நூலுக்குத் தாம் வரைந்த முன்னுரையில் காலஞ்சென்ற பேறிஞர் **டாக்டர் சி. ஆர். ரெட்டி** அவர்கள் மேற்கண்ட கருத்தினைத் தெரிவித்துள்ளனர். தெலுங்கிலுள்ள இச்செய்தியைப் படித்து, யான் எழுதியுள்ள முறை தக்கதே என்பதை எனக்குத் தெரிவித்து ஊக்கியவர் என் கெழுதகை நண்பர் **வேதம் வேங்கடராய சாஸ்திரியார், M. A. ஆவர்.** அவருக்கு எனது நன்றி உரியது.

கல்வித்துறை இயக்குநரவர்கள் மதுரையில் என்னைத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிப் பேசுவித்தமையே இந்நூல் வெளிவரச் சிறந்த அடிப்படையாகும். தமிழகத்துக் கல்வித் துறையில் ஓய்வின்றி உழைத்து வரும் அப்பெருமகனார்க்கு என் வணக்கமும் நன்றியும் உரியவாகும்.

இவ்வாராய்ச்சி நூலை வெளியிட இசைவு தந்த சென்னைப் பல்கலைக் கழக ஆட்சியாளர்க்கு (Syndicate) எனது நன்றியும் வணக்கமும் உரிய.

கல்விக்கும் மருத்துவத்திற்கும் அருந்தொண்டாற்றி வருபவரும், உலகப் பெரியாருள் ஒருவரும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான **டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார்** அவர்கட்கு இந்நூலை உரிமையாக்க இசைவு நல்கும்படி அப்பெரியாரவர்களை வேண்டினேன், அருள் உள்ளம் கொண்ட அவர்கள் எனது வேண்டுகோளுக்கு இசைந்ததே யான் பெற்ற பெரும் பேறாகும். அம் மூதறிஞரவர்கட்கு என் வணக்கமும் நன்றியும் உரியவாகும்.

இங்ஙனம் விரிவான முறையில் இலக்கிய வரலாறு வருவது நல்லதே எனக் கூறி எனக்கு ஊக்கமளித்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராயுள்ள **பேறறிஞர் டாக்டர் மு. வரதராசனார்** அவர்கட்கு என் உளமார் நன்றியும் வணக்கமும் உரிய.

என் திருமகன் **மா. ரா. இளங்கோவன் (M.A.)** என் திருமகள் **மா. ரா. தமிழரசி (M.A.)** ஆகிய இருவரும் இந்நூலைப் பிழையறப் படியெடுத்தனர். அச்சுப் படிகளைப் படித்துத் திருத்தினர். இவ்விருவர்க்கும் நல்லாசி வழங்கும் படி அங்கயற்கண்ணியோடமர்ந்த ஆலவாயண்ணலை வேண்டுகிறேன்.

மா. இராசமாணிக்கம்

உள்ளுறை

இலக்கியம்-இலக்கியத் தோற்றம்

4. *சங்ககால இலக்கியம்*

வாழ்க்கையின் உயிர்நாடி-அகப்பொருள் இலக்கணம்-களவொழுக்கம்-அறத்தொடு நிற்றல்-கற்பு வாழ்க்கை-புறப்பொருள் இலக்கணம்.

5. *மதுரையில் தமிழ்ச்சங்கம்*

முச்சங்கங்கள் பற்றிய செய்தி-சங்கம் இருந்தமைக்குப் பிற்காலச் சான்றுகள்-சங்கநூல் சான்றுகள்-சங்ககாலம்.

6. *சங்ககால வரலாறு*

1. கடல் வாணிக வரலாறு
2. இந்திய வரலாறு
3. இலங்கை வரலாறு

7. *தொல்காப்பியம்*

1. தொல்காப்பியத்தின் பழைமை
2. தொல்காப்பியத்தின் காலம்
3. தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகள்
எழுத்ததிகாரம்-சொல்லதிகாரம்-பொருளதிகாரம்.
4.தொல்காப்பியருக்கு முற்பட்ட நூல்கள்
5.தொல்காப்பிய உரையாசிரியர்கள்: இளம்பூரணர் -சேனாவரையர்-பேராசிரியர்-நச்சினார்க்கினியர் -தெய்வச்சிலையார்-கல்லாடர்.

8. *திருக்குறள்*

திருக்குறளும் மணிமேகலையும்-மணிமேகலை யின் காலம் என்ன?-திருக்குறளின் பழைமை-திருக்குறளும் சங்க நூல்களும்-திருவள்ளுவர் காலம்-திருக்குறட்சிறப்பு.

9. *எட்டுத்தொகை*

1. எட்டுத்தொகை:ஐங்குறுநூறு-குறுந்தொகை-நற்றிணை-அகநானூறு-கலித்தொகை-பதிற்றுப் பத்து-பரிபாடல்-புறநானூறு.
2. புறநானூற்றின் காலம்:முன்னுரை-புறநானூறு -புற நானூற்றின் காலம்-பெருஞ்சோற்று உதியன்

சேரலாதன்-தருமபுத்திரன்-வான்மீகியார்-நெடியோன்-கரிகாலன்-நெடுமுடிக்கிள்ளி-பிற சோழ வேந்தர்.

10. ஐங்குறுநூறு

முன்னுரை-ஐங்குறுநூற்றுப் புலவர்கள்-பேரரசரும் சிற்றரசரும்-ஊர்கள்-சிறப்புச் செய்திகள்-அணிகள்- விளையாட்டுகள்-மேற்கோள்- அந்தணர் கூட்டுறவு.

11. குறுந்தொகை

முன்னுரை-குறுந்தொகையைப் பாடிய புலவர்கள்-பெண்பாற் புலவர்கள்-அரசர்-சிற்றரசர்-ஊர்கள்-சிறப்புச் செய்திகள்-அணிகள்-பண்பாடு-மேற்கோள்-வடசொற்கள்.

12. நற்றிணை

முன்னுரை-நற்றிணையில் செய்யுட்களைப் பாடிய புலவர்கள்-அரசரும் சிற்றரசரும் –அரசியல்-ஆயன்- ஊர்கள்-உடை-வாணிகம்-கலைகள்-சமயம்-பண்பாடு-மேற்கோள்-உவமை முதலியன-வடசொற்கள்.

13. அகநானூறு

முன்னுரை-அகநானூற்றில் இடம்பெற்ற புலவர்கள்-நந்தர்கள்-மோரியர் படை யெடுப்பு-பேரரசர்-சிற்றரசர்-பாணர்கள் (Banas)-கங்கர்-திரையர் -ஊராட்சி-தமிழர் திருமணம்-சமயச் செய்திகள்-நாகரிகம்-பண்பாடு-புராணக் கதைகள் -வட சொற்கள்.

14. கலித்தொகை

கலித்தொகையின் புதுமைகள்-கலித் தொகை ஆசிரியர்-ஐவரல்லர்-கலித் தொகையின் காலம்-ஏறு தழுவல்-தமிழ்ச் சங்கம்-கல்வி-அணிகள்-சமயச் செய்திகள்-சில உண்மைகள்-உவமை முதலியன-மேற்கோள்-வடசொற்கள்.

15. பரிபாடல்

முன்னுரை-பரிபாடல் நூல்-பரிபாடலின் காலம்-முப் பொருள் பற்றிய பாடல்கள்-இருங்குன்றம்-இருந் தையூர்-தன்பரங்குன்றம்-வையை-தமிழ் வையை-தைந்நீராடல்-அடியார் வேண்டுதல்-ஓவியம்-பேரெண்கள்-மேற்கோள்-புராண கதைகள்-வட சொற்கள்-வடமொழிப் பெயர்கள்-மொழிபெயர்ப்பு.

16. பதிற்றுப்பத்து

முன்னுரை-பாடல் பெற்ற சேரர்-சேரர் கொடை-பதிற்றுப்பத்தின் காலம்-பதிகங்கள் - சேரர் வீரம்-கொடைச் சிறப்பு-ஆட்சிச் சிறப்பு-படையெடுப்பு உழிஞைப் போர்-பாசறை-சமயச் செய்திகள்-நக ரங்கள் - வருணனை -வாழ்த்து முறை-மேற்கோள் -வட மொழியாளர் செல்வாக்கு.

17. புறநானூறு

முன்னுரை-புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய புலவர்கள்-பேரரசரும் சிற்றரசரும்-ஆட்சிச் சிறப்பு-அரசர் ஒழுக்கம்-தமிழ்ப் புலவர்கள்-தமிழரசரும் புலவரும்-சிற்றரசர்-தமிழ் வீரர்-சமயம்-தமிழர் வட நாட்டு அறிவு-பண்பாடு-அந்தணர்-வடசொற்கள்.

18. பத்துப்பாட்டு

முன்னுரை-பத்துப் பாட்டின் காலம்-திருமுரு காற்றுப் படையின் காலம்-பத்துப் பாட்டு என்னும் பெயர்-திருமுருகாற்றுப்படை-பொருநராற்றுப் படை-சிறுபாண் ஆற்றுப்ப்டை-பெரும்பாண் ஆற்றுப்படை-முல்லைப்பாட்டு-மதுரைக் காஞ்சி-நெடுநல்வாடை-குறிஞ்சிப் பாட்டு-பட்டினப் பாலை-மலைபடுகடாம்-உயிர் காட்சிச் சாலை-வாணிகம்-அந்தணர் செல்வாக்கு-புராண கதைகள்-வடசொற்கள்.

19. சிலப்பதிகாரம்

சிலப்பதிகார காலம்- சிலப்பதிகாரச் சிறப்பு-திரு மணச் சடங்குகள்-நடனக் கலை-இசைக்கலை-இந்திர விழா-தமிழர் வீரம்-அக்காலப் பெரு வழிகள்-சிறப்புச் செய்திகள்-இளங்கோவடிகள்

சிறப்பு-வட மொழியின் செல்வாக்கு-வடசொற்கள்.

20. மணிமேகலை

ஆசிரியர்-நூலின் அமைப்பு-இந்திர விழா உடலின் இழிவு-உடல் அடக்க முறைகள்-அரசியல் அறிவுரை -பசிப்பிணி என்னும் பாவி-உண்டி கொடுத்தோர்-சிறப்பு-தலயாத்திரை-கணிகையர் இயல்பு-கணிகையர்க்குத் தண்டனை-அறம் செய்யக் காரணம்-அரச நீதி-தீயவை பத்து-அரசர்க்கு அறி வுரை-சமயக் கருத்துகள்-பாண்டுகம்பளம்-விருப்பப்படி பிறப்பு-அறத்தின் சிறப்பு-வருணனை -கதைகள்-பிறமொழிச் சொற்கள்-முடிவுரை.

சோழர் வரலாறு (1947)

ஆசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AF%8B%E0%AE%B4%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81



பாராட்டுரை

நாவலர்

25-1-'47

ச. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.,

பசுமலை

To

சென்னை **வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை** அவர்கள்,
B.O.L., L.T., M.O.L.,

அன்பார்ந்த ஐயா,

நலம். நானங்கு நாடுவதும் நலமே. தாங்கள் அன்போடனுப்பிய சோழர் வரலாறு - மூன்று பகுதிகளும் வரப்பெற்றேன்; படித்து மகிழ்வுற்றேன். இனிய எளிய நடையில், கனியு மதுர மொழியால், பொன்னி வளநாட்டுப் புகழ்ச் சோழர் பொன்கால வரலாறு தமிழருக்குத் தந்த பெருமை. தங்களதென்பதில் தடையில்லை. நடுநிலையில் நெடு நாளாய்ந்து, பழம் பாடல், இடைக்காலச் சான்றோர் நூல், கல்வெட்டு, செப்பேடுகள் அனைத்தும் துருவி, தற்கால ஆராய்ச்சியாளர் கருத்துகளை அலசி, நேர்மை வழுவாத நன்முடிபுகளைக் கண்டு வெளியிட்ட தமிழ்ச்சரித வரிசையிலே தங்கள் கட்டுரைகள் சிறப்பிடம் பெறுவதில் ஐயமில்லை. தங்கள் குலோத் துங்கன் வரலாறும், பிற உரைகளும் சோழர் வரலாற்றுக்குச் சார்பும் துணையும் தந்து வளம் நிறை பாராட்டுக்குரியது.

இளமையிலே தம் முயற்சியால் நிரம்பிய நூல் பயின்று, தாம் வரம்பறுத்த வரலாறுகள் எழுதி உதவிய அருந்திறனும் நுண் அறிவும் இளம்புலவர் பாராட்டிப் பின்பற்றிப் பயனடைய உதவுமென நம்புகிறேன். நடு வயதை அடையுமுனம், புலமையொடு புகழ் வளரப் பெற்றுள்ள தாம், நெடும் பல்லாண்டினிய தமிழ்த் தொண்டாற்றி, பொருளுரை நூல் பல இயற்றி, அறிவுடையார் அவையிலிடம் அடைந்து சிறந்து உயர்ந்திடுமாறு இறைவன் அருள் கூட்டிடுக. என்றும் தம் நட்பையும் பலனையும் விரும்பும்.

அன்பன்,
இளசைகிழான்
ச. சோமசுந்தர பாரதி

முன்னுரை

தமிழர் நாகரிகம் சோழ அரசர்களால் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்தது. தென்னிந்தியா முழுவதும் ஒரே ஆட்சிக்கு உட்பட்டுச் சுமார் முந்நூறு வருஷகாலம் ஒரே ராஜ்யமாக ஆளப்பட்டு வந்தது. நாடெங்கும் அமைதி நிலவியது. சிறியவும் பெரியவும் ஆன கற்கோயில்கள் கட்டப்பட்டன. அழகு வாய்ந்த சிற்பங்கள் அநேகம் கல்லில் செதுக்கப்பட்டன; வெண்கலத்திலும் வார்க்கப்பட்டன. நல்ல ஒவியங்கள் பல வரையப்பட்டன. கைத்தொழில்களும் வியாபாரமும் செழித்து வளர்ந்தன. ஜயங்கொண்டார், சேக்கிழார், கம்பர், ஒட்டக் கூத்தர் முதலிய பெரும் புலவர்கள் பலர் இனிய நூல்களை இயற்றித் தமிழைப் பெருக்கினார்கள். இம்மாதிரியான பல காரணங்கள் பற்றிச் சோழ அரசர்களின் மேன்மையும் பெருமையும் இந்தியா முழுவதுமின்றி, ஆசியாக்கண்ட முற்றிலுமே எல்லாரும் போற்றும்படி விளங்கின.

இந்த மேன்மை மிக்க நூற்றாண்டுகளின் சரித்திரத்தை விரிவாகத் தமிழில் எழுத **வித்துவான் மா.இராசமாணிக்கம்** முன் வந்திருப்பது ஒரு நல்ல காரியம். அவர்கள் தம் நூலை நல்ல ஆராய்ச்சி முறையில் எளிய நடையில் யாவர்க்கும் பயன்படக் கூடிய வழியில் எழுதியிருக்கிறார்கள் என்பது சில பக்கங்களைப் படித்தாலே எளிதில் விளங்கும். நல்ல ஆராய்ச்சி நூல்களை அவர்கள் நன்கனம் கற்றறிந்திருப்பதோடு, சுயமாகவும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டவர்கள். ஆயினும் அவர்கள் வெளியிட்டிருக்கும் அபிப்பிரா யங்கள் எல்லாவற்றையும் எல்லோரும் ஒருங்கே அங்கீ கரிப்பார்கள் என்று அவர்கள் எண்ணமாட்டார்கள். அஃது அவசியமுமில்லை. நம் நாட்டுச் சரித்திரப் பகுதிகள் பலவற்றில் அபிப்பிராய வேறுபாடுகளுக்கு இடம் இருந்து கொண்டேதானிருக்கும். ஆனால் இம்மாதிரி நூல்கள், அவ்வப்போது கிடைக்கும் ஆய்ந்த தீர்மானங்களை எல்லோரும் எளிதில் அறிந்து கொள்வதற்கு வேண்டிய நல்ல கருவிகளாகும். இந்தச் சோழர் சரித்திரத்தைப் பலர் படித்து நன்மை பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை யுனிவர்சிடி,

14-3-47 **K.A. நீலகண்ட சாஸ்திரி**

பல்லவப் பேரரசர் (1946)

ஆசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%AA%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%B5%E0%AE%AA%E0%AF%8D_%E0%AE%AA%E0%AF%87%E0%AE%B0%E0%AE%B0%E0%AE%9A%E0%AE%B0%E0%AF%8D



முன்னுரை

“பல்லவர் வரலாறு” என்ற எனது பெரு நூலைப் பார்வையிட்ட அறிஞர் பலர், இளைஞர்களுக்குதவும் முறையில் பல்லவரைப் பற்றிச் சில நூல்களை எழுதுமாறு வற்புறுத்தினர். அதன் பயனாகப் பல்லவப் பேரரசர் என்னும் வரிசையின் முதல் நூலாக வெளிவரும் இச்சிறு நூல் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இதனில், பல்லவப் பேரரசை ஏற்படுத்திய சிம்ம விஷ்ணுவின் மகனான மஹேந்திரவர்மன், பெயரனான நரசிம்மவர்மன் வரலாறுகள் குறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் காலத்திற்றான் பல்லவர்-சாளுக்கியர் போர்கள் வன்மையாகத் தொடங்கப் பெற்றன. சமணம் ஒடுக்கப்பட்டுச் சைவமும் வைணவமும் பரவின காலமும் இதுவேயாகும். தமிழ் நாட்டிற்கே புதியவையான. குடைவரைக் கோவில்களும் ஒற்றைக்கற் கோவில்களும் தோற்றம் எடுத்தமை இப்பேரரசர் காலத்திற்றான் என்பதை அனைவரும் அறிவர். நாகரிகக் கலைகளான இசை-நடனம்-நாடகம் சிற்பம்-ஓவியம் என்பன பல்லவ

மன்னரால் போற்றி வளர்க்கப்பட்ட காலமும் இதுவென்னலாம். இப்பல துறைகளில் இப்பேரரசர் காட்டிய வழிவகைகளைப் பின்பற்றியே இவர் மரபினர் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் பேரரசராக இருந்து பல்லவப் பெருநாட்டை ஆண்டனர் என்னல் மிகையாகாது. இங்ஙனம் எல்லாத் துறைகளிலும் பண்பட்டு விளங்கிய இப்பெரு வேந்தர் வரலாறுகளைப் படிப்பதால், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தமிழ் நாட்டு வரலாற்றை ஒருவாறு அறிந்தின்புறலாம்.

- இராசமாணிக்கனார்.

உள்ளுறை

காணொளிகள்

01] சோழர் வரலாறு-டாக்டர்.மா.இராசமாணிக்கனார்-நூல் மதிப்புரை-திருமிகு.சு.இலலிதா புவனேஸ்வரி-நூலிசை-272

https://www.youtube.com/watch?v=fWGhGUVwBV4 [55:32]

02] 12th Tamil|12 ஆம் வகுப்பு தமிழ்|இயல் 4|உரைநடை|பண்டைய காலத்துப் பள்ளிக் கூடங்கள்

https://www.youtube.com/watch?v=ZGsz_1xjCA8 [42:23]

03] தமிழர் நாகரிக வரலாறு கூறும் "ஆற்றங்கரை நாகரிகம்" நூல் வெளியீடு

https://www.youtube.com/watch?v=gNSJeMq2zdg [22:46]

04] **இராஜேந்திர சோழனின் வெற்றிச்சரித்திரம்**

https://www.youtube.com/watch?v=L_Gy5jymOaE [24:16]

05] **பைந்தமிழியக்கம் திருச்சி, 105-ஆம் திங்கள் பொழிவு அரசு சையது முர்துசா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.**

https://www.youtube.com/watch?v=N5k__Jy4-dU [1:48:47]

பைந்தமிழியக்கம் திருச்சிராப்பள்ளி, 105-ஆம் திங்கள் பொழிவு இன்று 30.03.2026 மாலை திருச்சி மரக்கடை அரசு சையது முர்துசா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. புலவர் பழ. தமிழாளன், இயக்குநர்- பைந்தமிழியக்கம் தலைமை & வரவேற்பை ஆற்றினார். தமிழ்த்திரு. ம. மெர்சி சேம்சு, தலைமை ஆசிரியர், அரசு சையது முர்துசா மேல்நிலைப்பள்ளி, முன்னிலை வகித்தார். மாணவர் அரங்கம், சமால் முகமது கல்லூரி, திருச்சி. பாவலரேறு பெருஞ்சித்திரனார் என்ற தலைப்பில் ச. நடராசன் மாணவரின் உரை. தமிழறிஞர் இராசமாணிக்கனார் என்ற தலைப்பில் மு. முருகேசு கண்ணா மாணவரின் உரை. வள்ளல் பாண்டித்துரையார் என்ற தலைப்பில் வே. சிவா மாணவரின் உரை. தமிழறிஞர் மா.லெ. தங்கப்பா என்ற தலைப்பில் சா. ஷிப்ல் ஹூசைன் மாணவரின் உரை. மரபுப் பாவரங்கம், பெண்களே நாட்டின் கண்கள் என்ற தலைப்பில் பாவலர் மும்தாசுபேகம் அவர்களின் உரை. ஆணுக்குப் பெண்ணிங்கே இளைப்பில்லை காண் என்ற தலைப்பில் பாவலர் க. மல்லிகா அவர்களின் உரை. மங்கையராகப் பிறப்பதற்கு நல்மாதவம் செய்திட வேண்டும் என்ற தலைப்பில் பாவலர் எசு. செசிலி அவர்களின் உரை. ஆய்வரங்கம், பேராசிரியர் முனைவர் விசய், தமிழ்த்துறை, சமால் முகமது கல்லூரி, திருச்சி, தமிழறிஞர் இரா.பி. சேது என்ற தலைப்பில் உரையாற்றினார். பாவலர் சொ. வேல்முருகன், துணை இயக்குநர், பைந்தமிழியக்கம், தொகுப்புரை ஆற்றினார். பாவலர் க. செல்வராசு, நன்றி உரை வழங்கினார்.

(😊)(😊) **இராசமாணிக்கனார்** (😊)(😊)